பக்கங்கள் : 12+IV = பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 15 வியாழக்கிழமை (31-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:245

# முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா உடன்பாடு

## ஹக்கீமுடன் 3 மணி நேரம் பேச்சு

கொழும்பு,ஜுலை31

**வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு விசேட உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்ற முஸ்லிம் தலைவர்களின் நிலைப் பாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடன்பட்டிருக்கின்றார்.**

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுப் பகல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசிய போது முஸ்லிம் தரப்பின் நிலைப்பாட்டை அவருக்கு எடுத்து விளக்கினார். அப்போதே முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்குத் தாம் உடன்படுவது பற்றிய குறிப்புக்களை ஜனாதிபதி வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

ஜனாதிபதி மாளிகையில் சுமார் மூன்று மணி நேரம் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை இச்சந்திப்பின்போது வலியுறுத்திய அமைச்சர் ஹக்கீம், ஜனாதிபதியின் பூரண ஒத்துழைப்பின்றி அதனை அடையமுடியாது என்பதையும் எடுத்துரைத்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முஸ்லிம் தரப்பின் நிலைப்பாட்டையும் அவர் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினார்.

அமைச்சர் ஹக்கீம் தெரிவித்த கருத்துக்களை செவிமடுத்த ஜனாதிபதி, தீர்வு நடவடிக்கைகளின்போது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப் படவேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக மீண்டும் வலியுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

## பலாலி விமான ஓடு பாதையை இந்திய நிபுணர் குழு பார்வையிட்டது

கொழும்பு,ஜுலை31

பலாலி விமானத்தளத்தின் ஓடு பாதையைப் புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்கு இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளைப் பூர்த்திசெய்வதற்கு 35 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளதாக விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

விமான நிலைய ஓடுபாதையை இந்திய நிபுணர்கள் குழுவொன்று பார்வையிட்டு மதிப்பிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஓடுபாதையின் மோசமான நிலை காரணமாகப் பயணிகள் விமானசேவை முற்றாக ஸ்தம்பிதமடைவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், ஓடுபாதையில் 1,500 அடி நீளமான பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட ஓடுபாதையில் தரையிறங்க முற்பட்ட விமானம் ஒன்று அண்மையில் பலத்த சேதமடைந்ததாகவும் விமானப்படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-8)

## புதிய வரைவை அமைச்சரவை ஆராய வேண்டியதில்லையாம்?

### அரசுடன் ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு,ஜுலை31

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக அரசு தயாரித்துள்ள புதிய யோசனைகளை தற்போதைய தருணத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டியதில்லை என்பதை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

நேற்று பிற்பகல் அமைச்சரவை கூடியபோது ஜனாதிபதியும் அமைச்சர்களும் இந்த விடயம் பற்றி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர் என்று அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இலங்கை அரச வானொலி நேற்றிரவு அறிவித்தது.

புதிய திட்ட வரைவில் உள்ள சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினார் என்றும் -

இந்த யோசனைகள் இறுதிக் கூட்டத் தீர்மானங்கள் அல்ல என்பதையும் அவர் வலியுறுத்தினார் எனவும் - தெரிவிக்கப்படுகிறது,

உத்தேச இடைக்கால நிர்வாகம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயத்தின்பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பு

கொழும்பு,ஜுலை31

இடைக்கால நிர்வாக விடயத்தில் புலிகளின் கருத்துக்களை நாம் ஆதரிப்போம். அதில் எதுவித திருத்தங்களையும் முன்வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை. கடந்த 28ஆம் திகதி புலிகளை நாம் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அச்சந்திப்பு நடைபெறவில்லை. அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மட்டு. - திருகோணமலை விஜயத்தின் பின்னர் சந்திப்பு நடைபெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. என்.ரவிராஜ் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாகத்தில் எவரெவர் பங்கேற்பது என்பதையிட்டு புலிகளே தீர்மானிப்பர். நாம் கடந்த பொதுத் தேர்தலின்போது வழங்கிய உறுதிமொழிகளுக்கு ஏற்ப எமது பணிகளைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம். இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகள் எம்முடன் கலந்தாலோசிக்க விரும்பினால், அவசியமெனக் கருதப்படும் விடயங்கள் மட்டில் எமது கருத்து முன்வைக்கப்படும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## வீட்டுத் தொலைபேசி மாதக் கட்டணம் ரூ.240இலிருந்து ரூ.594ஆக உயரும்!

### செப்ரெம்பர் முதல் சகல கட்டணங்களும் அதிகரிப்பு

ரெலிகொம் தொலைபேசிக்கட்டணங்கள் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும். இதன்படி வீட்டுப் பாவனை தொலைபேசிகளுக்கான தற்போதைய மாதாந்தக் கட்டணம் 240 ரூபாவிலிருந்து 594 ரூபா வாக அதிகரிக்கப்படும்.

தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கு தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருக்கிறது.

வர்த்தகப் பாவனைத் தொலைபேசிகளுக்கான தற்போதைய மாதாந்தக் கட்டணம் 540 ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

வழிபாட்டுத் தலங்களுக்கான தற்போதைய மாதாந்தக் கட்டணமான 60 ரூபாவில் மாற்றம் எதுவும் இல்லை.

தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணங்கள் அறவிடுவதில் முதல் 200 கூறுகளுக்கு கட்டண விலக்கு அளிக்கப்படவிருப்பது இந்த கட்டண

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி தெற்கில் நெற்செய்கைக்கு அனுமதி?

இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் சில நெல்வயல்களில் இம்முறை காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் என்று தெரியவருகிறது.

தென்மராட்சி தெற்கிலுள்ள நெல்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படவுள்ள பகுதிகள் நேற்று தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு, நேரில் காண்பிக்கப்பட்டன.

இப்பகுதியில் கடந்த வருடமும் சில இடங்களில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். (ஐ-117)

## மக்கள் மேம்பாட்டுப் பணிகளில் விழிப்பும் விவேகமும் அவசியம்

### அரச அதிகாரிகளின் கலந்துரையாடலில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை31

சமூக, பொருளாதார கட்டுமானங்களில் சிதைவுகள் ஏற்படாமலும் அரசியல் ரீதியான பாதிப்புகளுக்கு இடமளிக்காமலும் விழிப்புடனும் விவேகத்துடனும் செயற்படுவதுதான் தமிழ் இனத்தின் வாழ்வை மேம்படுத்தும்.

- விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் அரச உயர் அதிகாரிகளுக்கு நேற்று நடத்தப்பட்ட கலந்துரையாடலில் மேற்கண்ட கருத்து வலியுறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் போராட்டத்தால் மட்டு.கச்சேரி முற்றாக முடக்கம்!

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுக்காலை முதல் மட்டக்களப்பு கச்சேரி வாசல்கள் இரண்டையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் கச்சேரி அலுவல்கள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு போராட்டத்தை நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதிலும் பயனளிக்கவில்லை.

கச்சேரி ஊழியர்கள் உட்செல்லாமல் தடுத்து காலை 7.30 மணிக்கே பட்டதாரிகள் போராட்டத்தில் குதித்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா கிரனேட் வீச்சுச் சம்பவம்:

## கண்காணிப்புக் குழுவினருக்கு விடுதலைப் புலிகள் முறைப்பாடு

கிளிநொச்சி,ஜுலை31

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையினரால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கிருஷாந்தி படுகொலை வழக்கு:

## மரண தண்டனை விதிக்கப்பட்ட எதிரிகளின் அப்பீல் மனுவை விசாரிக்க உயர்நீதிமன்றம் முடிவு

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை ஆரம்பமாகுமென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் திகதி செம்மணிப் பகுதியில் கிருஷாந்தி குமாரசுவாமி என்பவரை தடுத்துவைத்து, பின் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய பின்னர்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்








நாதஸ்வர வித்வான் என்.கே.பத்மநாதனுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெற்றது. பத்மநாதனின் உருவப்படத்துக்கு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்படுவதையும் நாதாஞ்சலி இசைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

அஞ்சலி உரைகளை நிகழ்த்திய நாதஸ்வர கலைஞர் கே.ஆர்.சுந்தரமூர்த்தி, மஹாவித்துவான் வீரமணி ஐயர், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கவிஞர் புதுவை இரத்தினதுரை, து.வைத்திலிங்கம் ஆகியோரைக் கீழுள்ள படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*







# கொள்கலன் ஏற்றிய லொறி மோதி கிரான்குளத்தில் வயோதிபர் பலி!

## மக்கள் ஆர்ப்பாட்டம்; அதிரடிப்படை தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூலை31

மட்டக்களப்பு, கிரான்குளத்தில் வயோதிபர் ஒருவர் கொள்கலன் ஏற்றி வந்த லொறி மோதி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் லொறிச் சாரதியைக் கைதுசெய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்ற அதிரடிப்படையினர் அங்கு திரண்டிருந்த மக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் மேற்கொண்டனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு கிரான்குளம் வீதியில் வேகமாக வந்த கொள்கலன் லொறியொன்று, சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 65 வயதான கந்தையா என்ற வயோதிபர் மீது மோதியது. அவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

கொள்கலன் ஏற்றிவந்த லொறிச் சாரதி ஓடித் தப்பினார். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்று லொறிச்சாரதி கைதுசெய்யப்பட்டார். அதிரடிப்படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கிரான்குளத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தால் மட்டக்களப்பு பஸ் போக்குவரத்து கல்முனையுடன் நிறுத்தப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்க வடிவேல், கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சென்று சமரசத்தில் ஈடுபட்டனர். வயோதிபருக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு தருவதாக லொறி உரிமையாளர் களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் வைத்து உறுதியளித்தார் எனத் தெரிகிறது.

# வல்லுறவுக் குற்றச்சாட்டில் சந்தேக நபர்களுக்கு பிணை

தென்மராட்சி,ஜூலை31

இளம்பெண்ணைக் கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்களுக்குச் சாவகச்சேரி நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பகுதியைச் சேர்ந்த 17 வயது யுவதியைக் கடத்திச் சென்று மீசாலைப் பகுதியில் வைத்துப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக பேதுருப்பிள்ளை பெனடிக்ற், தங்கராசா தங்கரூபன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இருசந்தேகநபர்களையும் 7ஆயிரத்து 500ரூபா ரொக்கப்பிணையிலும், 15ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் செல்ல அனுமதித்தார் நீதிவான்.

முறைப்பாட்டுக்காரர், சாட்சிகள் ஆகியோரை மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது எனவும், நீதிமன்ற அனுமதியின்றி குடாநாட்டைவிட்டு வெளியேறக் கூடாது எனவும், தினமும் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்குமிடையில் கையொப்பமிடல் வேண்டுமெனவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. (ம-117)

# ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை31

இலங்கை வங்கியின் 64ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ்.மேற்றரக் கிளையில் நடைபெறவுள்ளது.(ம-5)

# மைத்துனர் தகராறினால் கத்திக்குத்து!

யாழ்ப்பாணம்,ஜூலை31

உணவகம் ஒன்றை நடத்துவதில் மைத்துனர்கள் இடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்த பகையினால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. கடையை நடாத்தி வந்தவருக்கு நெருக்கமான ஒருவர் கடையில் இருந்தபடி கடைநடத்துபவரின் மைத்துனருக்கு கத்தியைக் காட்டி மிரட்டியதாகவும்-

இதனால், ஆத்திரமடைந்த மைத்துனர் கடைக்குள் புகுந்து அந்த நபரை கத்தியால் குத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி தெல்லிப்பழை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)

# பலத்த பொலீஸ் பாதுகாப்புக்கு மத்தியில் பள்ளிவாசல் தர்ஹாவில் கொடியேற்று விழா

பொலீஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசல் தர்ஹாவில் கொடியேற்று விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

கல்முனைக்குடி ஜும் ஆ பெரிய பள்ளிவாசல் மையவாடியில் வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டதன் எதிரொலியாகக் கடந்த 18ஆம் திகதி ஜும் ஆ தொழுகைக்குப்பின் ஏற்பட்ட குழப்பத்தின் போது ஒரு குழுவினர் தம்மைத்தாமே புதிய நிர்வாகிகளாகப் பிரகடனம் செய்து கொண்டனர்.

இவர்கள் கடற்கரைப் பள்ளிவாசல் கொடியேற்ற விழாவை தலைமை ஏற்று நடத்துபவர்கள் என்று அறிவிக்கப்பட்டதோடு, பழைய நிர்வாகத்தினர் இதில் தலையிட முனைந்தால் 'தர்ஹா கொடி' எரிக்கப்படும் என்றும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இதனால், பதற்றம் - பரபரப்பு நிலவியது. இதனையடுத்தே பெரும் எண்ணிக்கையிலான பொலீஸார் கடற்கரைப் பள்ளிவாசல் வளாகத்தில் குவிக்கப்பட்டு கொடி ஏற்றப்பட்டது.

கல்முனைக்குடி ஜும் ஆ பெரிய பள்ளிவாசல் - கடற்கரைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் யூ.கே.சம்சுதீன் (பிஸ்கீன்) தலைமையிலேயே கொடியேற்ற விழா இடம்பெற்றது. அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

# திருகோணமலை விஜயத்தை ஜனாதிபதி ஒத்திவைத்தார்!

கொழும்பு,ஜூலை31

திருகோணமலைக்கு நாளை மேற்கொள்ளவிருந்த விஜயத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரத்துச் செய்துவிட்டார் என்று தகவல் ஒன்று கூறுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள சுமார் 4 ஆயிரம் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் நிகழ்ச்சியில் பங்குபற்ற ஜனாதிபதி அங்கு செல்லவிருந்தார்.

திருகோணமலை கடற்படைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவிருந்த இந்நிகழ்ச்சி மாகாண ஆளுநரின் அறிவுரையின் பேரில் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

அந்நிகழ்ச்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும். இதற்கென வடக்கு - கிழக்கு மாணவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

# இந்த ஆண்டில் திருமணமா? யோசித்து செய்யுங்கள்!

புதுடில்லி,ஜூலை31

இந்த ஆண்டு திருமணம் செய்துகொள்பவர்கள் நன்றாக யோசித்து செயற்படவேண்டும் என்று ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

புதுடில்லியில் உள்ள லட்சுமி நாராயண கோயில் தலைமை அர்ச்சகர் லட்சுமி நாராயண சாஸ்திரி இது குறித்துத் தெரிவித்திருப்பதாவது:-

இந்த ஆண்டு வியாழக்கிரகம் திருமண வாழ்க்கையை வளம் குன்றச் செய்வதாக உள்ளது. எனவே, இந்த ஆண்டு திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளவர்கள் அது குறித்து நன்கு யோசித்துச் செயற்படவேண்டும்.

பொதுவாக சிம்மம் மற்றும் கன்னி ராசிக்காரர்களுக்கு திருமணம் செய்து கொள்ள இது உகந்த காலம் அல்ல. அவர்கள் ஒக்ரோபர் 25ஆம் திகதிக்குப் பிறகே திருமணம் செய்துகொள்ளலாம். மற்ற ராசிக்காரர்கள் கூட வியாழக்கிரகத்திற்கு பரிகாரம் செய்த பிறகே திருமணம் செய்துகொள்ள வேண்டும். வழக்கமாக 18 ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு ஏற்படும் - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### வேட்பாளர் பட்டியலில் இல்லாத ஒருவரை

# புத்தளம் நகர சபைத் தலைவராக நியமிக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை

புத்தளம்,ஜூலை31

புத்தளம் நகர சபையின் புதிய தலைவராக வேட்பாளர் பட்டியலில் இல்லாத ஒருவரை நியமனம் செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒரு மாத இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான எஸ்.ஸ்ரீபவன் இந்தத் தடையுத்தரவைக் கடந்த திங்களன்று பிறப்பித்தார்.

புத்தளம் நகர சபையின் தலைவராக இருந்த ஏ.எம்.எச்.ஹுசைன் (மு.கா.) தலைவர் பதவியிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்ததால் ஏற்பட்ட உறுப்பினர் வெற்றிடத்துக்கு கே.எம்.பைரூஸ் (மு.கா.) கடந்த 22ஆம் திகதி நியமிக்கப்பட்டார். இவர், நகரசபைத் தலைவராகவும் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. வேட்பாளர்பட்டியலில் இல்லாத ஒருவரை நகரபிதாவாக நியமனம் செய்யமுடியாது எனவும், இதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கும்படியும் மனுவில் கோரப்பட்டது.

கே.எம்.பைரூஸ் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

இம்மனுவை விசாரணை செய்த நீதிவான் எஸ்.ஸ்ரீபவன் எதிர்வரும் 27.08.2003ஆம் திகதிவரை தடையுத்தரவு பிறப்பித்தார். (ஐ)

# சாவகச்சேரியில் மின் விநியோகம் விஸ்தரிப்பு

தென்மராட்சி,ஜூலை31

சாவகச்சேரி நகரின் மேலும் சில வீதிகளுக்கு நேற்றுத் தொடக்கம் மின் வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சிவன்கோயில் வீதி, ஹொன்ஸ்மன் வீதி, இராமலிங்கம் வீதி, கற்குளி வீதி, ஆகியவற்றுக்கே மின் விநியோகம் சாவகச்சேரியில் உள்ள ஜெனரேற்றரிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# பாதுகாப்புப் பொறுப்பை தனியாக ஏற்க முடியாது

## சபாநாயகர் அறிவிப்பு

நாடாளுமன்றப் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றுசபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதனைத் தெரிவித்திருக்கும் சபாநாயகர், நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தனியாகச் செய்யக்கூடிய காரியமல்ல எனவும், எம்.பிக்களின் பங்களிப்பும் அதற்கு அவசியமானது எனவும் கூறியிருக்கிறார்.

### கோடைப்பருவம் முடிவதற்குள்

# விமானங்களைக் கடத்தி தாக்குதல்கள் நடக்கலாம்!

## அமெரிக்கா எச்சரிக்கை

வாஷிங்ரன்,ஜுலை31

தற்போதைய கோடைக்காலம் முடிவதற்குள் விமானங்களைக் கடத்தி தற்கொலைத் தாக்குதல்களை நடத்த இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று அமெரிக்கா எச்சரித்திருக்கிறது.

பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரேலியா மற்றும் கிழக்கு அமெரிக்காவின் பகுதிகளை தீவிரவாதிகள் இலக்கு வைக்கத் திட்டம் தீட்டியுள்ளனர் என்றும் அது கூறியுள்ளது.

இதற்கான திட்டங்கள் ஜுன் மாத நடுப்பகுதியில் வகுக்கப்பட்டிருக்கிறது என்று கூறும் அமெரிக்கா தலா ஐந்து பேர் கொண்ட தீவிரவாத அணிகள் ஒவ்வொன்றும், வர்த்தக விமானங்களை அவை மேலெழுந்து பறக்கத் தொடங்கியதும் அல்லது தரையிறங்குவதற்கு சிறிது முன்னர் கடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கையை மேற்படி நாடுகளுக்கும், தனது விமான சேவை நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள அமெரிக்கா, இது குறித்து மிகவும் விழிப்புடன் இருக்குமாறும் கேட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு கிடைத்த இந்தப் புலனாய்வுத் தகவல் எந்தளவுக்கு உண்மையானது என்பதை மதிப்பீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்மைக்காலங்களில் கைது செய்யப்பட்ட அல்-கெய்டா உறுப்பினர்களிடம் இருந்து இத்தகல்கள் கிடைக்கப் பெற்றதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் இலக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள், பொருளாதார இலக்குகள் மற்றும் பெருந்தொகையானோரே பலி கொள்ளக் கூடிய மையங்களாக இருக்கலாம் என்று அந்த எச்சரிக்கையில் தெரிவிககப்பட்டிருக்கிறது.

ஈராக் போரால் எழுந்த பதற்ற நிலையே இத்தகைய தாக்குதல்களுக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அத்துடன், ஆள்கடத்தல்கள், குண்டு வெடிப்புகள், இரசாயன, உயிரியல் ஆயுதங்களால் தாக்கும் அபாயம் என்பன அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும் இதனால் அமெரிக்க மக்கள் கூடும் விடுதிகள், பாடசாலைகள், ஆலயங்கள் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம் கூறியிருக்கிறது. (ஒ)

## உட்கட்சித் தேர்தலில் முறைகேடு: கருணாநிதிக்கு நீதிமன்று அழைப்பு

தமிழகத்தில் தி.மு.க. உடகட்சித தேர்தலில் முறைக்கேடு நடந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு அழைப்பாணை அனுப்ப சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரம்பூர் கோட்டம் பிரதிநிதி விஷ்ணு ஸ்டாலின் என்ற அஸ்வின் விஷ்ணு இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

கட்சி விதிமுறைகளைப் பின்பற்றாமல் பெரம்பூர் பகுதி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பகுதி நிர்வாகிகளுக்கான தேர்தலில் முறையான அறிவிப்பு, விண்ணப்பங்கள் வழங்கப்படவில்லை. தேர்தல் நடந்திருந்தால் நான் வெற்றி பெற்றிருப்பேன். தேர்தல் நடத்தாமல் புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தது சட்டவிரோதம் என்று அறிவிக்க வேண்டும் என்று மனுவில் அஸ்வின் விஷ்ணு கோரியிருந்தார்.

தி.மு.க.வின் பொதுச்செயலர் அன்பழகன், அமைப்புச் செயலர் இளங்கோவன் ஆகியொருக்கு அழைப்பாணை அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஈராக்கில் உருவாகின்ற கெரில்லா அமைப்புகள்

சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அமெரிக்கப்படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில், சதாமின் ஆதரவாளர்கள் 35 ஆயிரம் பேர் கொண்ட கெரில்லாப் படை ஒன்றை உருவாக்கியுள்ளதாக ஈராக் தகவல் துறை அமைச்சக முன்னாள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கறுப்புப் படை, பழிவாங்கும் படை என இவர்கள் இருபிரிவாக பிரிந்து செயற்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள அமெரிக்கப் பத்திரிகை ஒன்று சதாமின் ஆதரவாளர்கள் கெரில்லாப் படையை அமைத்துள்ளனரா என்பதை அமெரிக்கப் புலனாய்வுத்துறை திட்டவட்டமாக மறுக்க முடியாத நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் அல்-அராபியா தொலைக்காட்சியில் தமது முகத்தை கறுப்புத் துணியால் மூடியிருந்த இளைஞர் குழு ஒன்று, அமெரிக்கப்படையினருக்கு எதிரான வாசகங்களை வாசித்தது. ஈராக்கில் நடக்கும் தாக்குதல்களுக்குப் பழிக்குப் பழி வாங்குவோம் என்று அந்தக் குழு எச்சரித்துள்ளது.

இதற்கிடையே -

பக்தாத்தில் நேற்றுமுன்தினம் கெரில்லாப் பாணியில் நடந்த தாக்குதல் ஒன்றில் அமெரிக்கப்படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர். (ஒ)

## ரஷ்யத் தலைநகரில் செயற்படும் ஈராக் தூதரகத்தில் கொள்ளை!

மொஸ்கோ, ஜுலை31

ரஷ்யாவில் உள்ள ஈராக் தூதரகத்தில் ஆயுதங்களுடன் நுழைந்த 3பேர் 30 கோடி ரூபா மதிப்புள்ள அமெரிக்க டொலர்களையும் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள யூரோக்களையும் (ஐரோப்பிய பொது நாணயம்) கொள்ளையடித்துச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை அதிகாலை நடந்தது. ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஈராக் தூதரகத்தில் பாதுகாப்பு பணியில் காவலாளி ஈடுபட்டிருந்தார். அப்போது ஆயுதங்களுடன் நுழைந்த 3 பேர் காவலாளியைத் தாக்கிவிட்டு பணம் வைத்திருந்த அறையை உடைத்து கொள்ளையடித்தனர்.


இதுகுறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ஒ)

## ஸ்பெய்னில் இருவருக்கு 790 ஆண்டு கால சிறை!

ஸ்பெயினில் 1987 ஆம் ஆண்டு 21 பேர் பலியாகக் காரணமான கார் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய இருவருக்கு 790 ஆண்டுகால சிறைத் தண்டனையை அந்நாட்டு நீதிமன்றம் விதித்துள்ளது.

இவர்கள் இருவர் மீதும் சதித்திட்டம், நாசவேலை, படுகொலை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் விசாரித்த நீதிபதி இருவருக்கும் 790 ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

எனினும், அந்நாட்டு சட்டப்படி ஒருவர் 790 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க முடியாது என்பதால் இவர்கள் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்தாலே போதுமாம். (ஒ)



பிரான்ஸில் பரவிவரும் காட்டுத் தீயிற்கு மேலும் ஒருவர் பலியாகியுள்ளார். ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த காட்டுத் தீயை அணைப்பதில் பிரஞ்சு தீயணைக்கும் படையினர் ஈடுபட்டுள்ளதையும் பிரான்ஸுக்கு உதவும் இத்தாலிய ஹெலி ஒன்று காட்டுத் தீயின் மீது தண்ணீரை விசுறுவதையும் படங்களில் காணலாம்.

### அமெ. விமர்சனத்தைப் புறக்கணித்துவிட்டு

## இஸ்ரேலையும், பலஸ்தீனத்தையும் பிரிக்கும் தடுப்புச் சுவர் அமைப்பதில் ஷெரோன் உறுதி!

நியூயோர்க்,ஜுலை31

இஸ்ரேலையும், பலஸ்தீனத்தையும் பிரிக்கும் தடுப்புச் சுவர் கட்டுவதை நிறுத்தப்போவதில்லை என்று இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் இதனை விமர்சித்துள்ளபோதும் ஷெரோன் இதனை வலியுறுத்தியுள்ளார்.

தடுப்புச் சுவர் கட்டுவதன் மூலம் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிற்குள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும் என்றும் -

தடுப்புச் சுவர் கட்டும் நடவடிக்கையால் சாதாரண பலஸ்தீனர்கள் பாதிக்கப்படாத வண்ணம் தான் பார்த்துக் கொள்வதாகவும் -

அவர் ஜனாதிபதி புஷ்ஷிடம் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, பலஸ்தீன நிர்வாகம் பயங்கரவாதிகளை அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எந்த நிமிடமும் இந்தப் புரிந்துணர்வு குழம்பிவிடலாம் என்றும் அவர் எச்சரிகை செய்துள்ளார்.



ஷெரோனுடன் புஷ்.

இஸ்ரேலையும், பலஸ்தீனத்தையும் பிரிக்கும் தடைச்சுவர், இஸ்ரேல் மீது நடத்தப்படும் தாக்குதல்களை குறைக்கும் என்று கருதப்படுகிறது. ஆனால் இந்த தடைச்சுவரானது நிலத்தை எல்லைபோட்டு பலஸ்தீன இராஜ்ஜியம் உதயமாவதைக் தடுக்கும் என்று பலஸ்தீனர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறனதொரு தடைச்சுவர் மத்திய கிழக்கு சமாதான திட்டத்தை குழப்பும் என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்திருந்தார். இது உணர்வுகளைக் கிளறிவிடக்கூடிய ஒரு பிரச்சினை என்றும் அதிபர் புஷ் கூறியுள்ளார்.

இஸ்ரேலும், பலஸ்தீனமும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து பாராட்டுத் தெரிவித்துள்ள புஷ், இஸ்ரேல் நூற்றுக்கணக்கான பலஸ்தீனக் கைதிகளை விடுலை செய்ய முன்வந்தமை சமாதான முயற்சிகளை மேலும் முன்னெடுக்க உதவியுள்ளது என்றார். (ஒ)

## பிரான்ஸில் காட்டுத்தீயால் மேலும் ஒருவர் உயிரிழப்பு!

பாரிஸ்,ஜுலை31

பிரான்ஸில் பரவிவரும் காட்டுத்தீக்கு மேலும் ஒருவர் பலியாகியுள்ளார்; ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதுவரை ஐவரின் உயிரைப் பறித்துள்ள இந்தத் தீயை அணைப்பதற்கு பிரான்ஸ் படையினரும் இத்தாலி தீயணைப்பு வீரர்களும் பகீரதப்பிராயத்தனம் செய்து வருகின்றனர். ஆனால், அது கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

இதுவரை, 10 ஆயிரம் ஹெக்டெயர் பரப்பிலான காடு தீக்கிரையாகியுள்ளதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காட்டுத் தீ வேகமாகப் பரவி வருவதையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு விஜயம் செய்வதை நிறுத்தியுள்ளனர். இதனால், சுற்றுலாத் துறை வருமானம் வீழ்ச்சியடைய நேரிடலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

### அப்துல் கலாம் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி,ஜுலை31

இந்திய ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம் வயிற்றுப்போக்குக் காரணமாக டில்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டார். (ஒ)

## ஓரினச் சேர்க்கையாளருக்கு அமெரிக்காவில் பாடசாலை

அமெரிக்காவில் மாணவ ஓரினச் சேர்க்கையாளருக்கெனத் தனியான பாடசாலை ஒன்று திறக்கப்படவுள்ளது.

மாணவர்கள் பாடசாலைகளில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது அமெரிக்காவில் அதிகரித்துள்ளதையடுத்தே, இவர்களுக்கென தனியான பாடசாலை ஒன்றைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஓரினச் சேர்க்கையாளருக்குப் பாடசாலை திறப்பதை நியூயோர்க் நகர மேயர் வரவேற்றுள்ளார். ஆனால், இந்தப் பாடசாலையில் மாணவர்கள் புத்தகக் கல்வியைக் கற்கப்போகிறார்களா? அல்லது ஓரினச் சேர்க்கைக் கல்வியைக் கற்கப் போகிறார்களா? என்று அந்தப் பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சாள்ஸ்மோன் என்பவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ)

## சதாமின் மகன்களை உயிருடன் பிடித்திருக்கலாம் அமெரிக்கா

### வேண்டுமென்றே கொன்றதாக சிரியா குற்றச்சாட்டு

பெய்ரூட்,ஜுலை31

சதாம் ஹுசைனின் மகன்களான உதய், குசே ஆகிய இருவரையும் கொல்லாமல் உயிருடனேயே அமெரிக்க இராணுவம் பிடித்திருக்கலாம் என்று சிரியா கருத்துத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக டமாஸ்கஸிலிருந்து லெபனான் தொலைக்காட்சிக்கு சிரிய அரசின் செய்தித்தொடர்பாளர் அளித்த பேட்டி வருமாறு:-

வடக்கு ஈராக் பகுதியில் ஜுலை 22ஆம் திகதி அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதலில் உதய், குசே இருவரும் கொல்லப்பட்டனர். அவ்விருவரையும் உயிருடனேயே பிடித்திருக்கலாம். ஆனால், அதை அமெரிக்கா விரும்பவில்லை.

1980-1988இல் நடந்த ஈராக் - ஈரான் போரின்போது ஈராக் அரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே அரசியல் ரீதியிலான உறவு பலமாக இருந்தது. ஈராக்குக்குப் பல்வேறு வழிகளில் ஆதரவாக நடந்து கொண்டது அமெரிக்கா. இதனால் ஊக்கம் பெற்ற ஈராக், அதற்குப் பிறகு விருப்பம் போல சர்வாதிகாரமாக செயற்பட்டது. இத்தகைய விடயங்களை வெளிப்படுத்த விரும்பவில்லை அமெரிக்கா. அதற்காகவே உதய், குசே இருவரையும் கைதுசெய்யாமல் சுட்டுக்கொன்றுள்ளது அமெரிக்கா என்றார் அவர்.

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட போரை தீவிரமாகக் குறைகூறி வருகிறது சிரியா. இந்நிலையில், சதாம் தலைமையிலான அரசுக்கு ஆதரவு அளித்து வந்ததாகவும் -

போருக்கு முன்பும் பின்புமாக சதாம் ஆட்சியில் இருந்த சில முக்கிய நபர்களுக்கு புகலிடம் தந்ததாகவும் சிரியா மீது, அமெரிக்கா குற்றஞ்சாட்டுகிறது. இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு சீர்கெட்டுள்ளது. (ஒ)

# அமரர் வீ.எம்.கணபதிப்பிள்ளை அவர்களின்

# 12 ஆம் வருட நினைவு அஞ்சலி

தோற்றம்

23

04

1913



மறைவு

31

07

1991

நிதம் மாறும் இந்த நிலையற்ற வாழ்வில்
கலையாத இனிய கனவினில் வாழ்கின்றோம்
கனவுகள் மறந்து நிரந்தர நித்திரையில்
மறைந்த எம் உறவுகளை மறுபடி சந்திப்போமென
கலைகின்ற கனவினில் கவலைகளை மறைத்து விட்டு
அழகான இனிய கனவுதான் வாழ்க்கையென்று
அமைதியுடன் வாழ்கின்றோம்.

*வீ.எம்.கே. குடும்பம்*

(C/29202)

வீ.எம்.கே. ஜுவலர்ஸ்
V. M. K. Jewellers
தங்கப்பவுண் நகை வியாபாரம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

உதயன்

# தென்பகுதி மக்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம்

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தும் அரசின் திட்டத்தை வன்மையாக எதிர்க்கப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இந்த எதிர்ப்பை எடுத்துக்காட்ட நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் எனவும், அவை அடுத்த புதன்கிழமை தொடங்கும் எனவும் ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்திருக்கின்றார்.

இரண்டு தசாப்தகாலக் கொடூரப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள்தான். அடிப்படை கட்டுமானங்களை இழந்து - வாழ்வியல் ஆதாரங்களை பறிகொடுத்து - அவதியுற்று, அல்லற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்தான்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் முயற்சிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தத் தீர்வை எட்டுவது விரைந்து - உடனடியாக - சாத்தியப்படக்கூடியதல்ல என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு நீண்டகாலப் பேச்சுக்கள், சமரச நடவடிக்கைகள் அவசியம்.

எனவே, யுத்த விளைவுகளால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மக்கள் தங்களது அன்றாட அவலங்களிலிருந்து விடுபடுவதற்கு, இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு எட்டும் வரை - அந்த நீண்ட காலத்துக்கு - அவலப்பட்டுக் கொண்டு காத்திருக்கமுடியாது. அவர்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரும் ஓர் இடைக்கால ஏற்பாடு அவசியம்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் சமரச முயற்சிகள் ஒருபுறம் தொடர வடக்கு - கிழக்கு மக்களின் அன்றாட பிரச்சினைக்கு முடிவைத் தரும் இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை மறுபுறத்தில் உடனடியாக மேற்கொள்வது என்ற உடன்பாட்டுக்கு அரசுதரப்பும், தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான புலிகளும் வந்ததற்கு இதுதான் காரணம்.

ஆனால், இடைக்கால நிர்வாக ஏற்பாடு கருக்கட்ட முன்னரே சிங்கள பேரினவாத தரப்பிலிருந்து எதிர்ப்புக் கிளம்பிவிட்டது.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் -அமைதி வழியில் -தீர்வு காணப்படுவதை ஜே.வி.பி. வரவேற்கவில்லை. ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் அடக்கி அவர்களின் உரிமைக்குரலை நசுக்க வேண்டும் என்ற தீவிரப் போக்கை உடையது அக்கட்சி.

தமிழர்களுக்கு சற்றேனும் நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்தித்தர வழிசெய்யும் இடைக்கால நிர்வாக கட்டமைப்பை பேரினவாதப் போக்குக் கொண்ட அக்கட்சி எதிர்ப்பதில் வியப்பேதும் இல்லை.

1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு அவர்களது தாயகத்தில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போதும் அதை எதிர்த்து ஜே.வி.பியினர் தென்னிலங்கையில் கலவரங்களையும் வன்செயல்களையும் தூண்டிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு -கிழக்கில் கணிசமான பகுதியை ஏற்கனவே புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். வளர்ந்து வந்துள்ள புலிகளின் இராணுவ வலிமை வடக்கு - கிழக்கின் அரச கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் பிரதேசங்களின் நிலையையும் கேள்விக்கு உள்ளாக்கியிருந்தது என்பதும் யதார்த்தம்.

இந்தச் சூழ்நிலையில்தான் புரிந்துணர்வு ஒப்பந்தமும் இருதரப்பு யுத்தநிறுத்தமும் செய்யப்பட்டு யுத்ததீவிர நிலை தற்காலிகமாக தணிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், "இருபது வருட யுத்தம் ஒன்றின் மூலம் தமது இலக்கை அடைய முடியாத விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக கட்டமைப்பின் மூலம் அதனை அடைய - வடக்கு - கிழக்கை தமது முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவர - முயல்கிறார்கள். அதற்கு ஜே.வி.பி. இடம்தராது" என்கிறது அக்கட்சி.

இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் - சமரச முறையில் - சமாதான நெறியில் - பலதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்று எட்டப்படுவதை ஜே.வி.பி. முழுமூச்சாக எதிர்க்கின்றது.

ஜே.வி.பியின் இந்தத் தவறான வழிகாட்டலுக்கு எடுபட்டு, முழுநாட்டினதும் எதிர்காலத்தை மேலும் கேள்விக்குள்ளாக்குவதா என்பதை அக்கட்சி கிளை பரப்பி வேரூன்றியுள்ள தென்பிரதேசத்தின் மக்களே தீர்மானிக்கவேண்டும்.

பொதுமகன் தாக்கப்பட்ட சம்பவம்:

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நேற்று ஆரம்பம்

யாழ். நகரப் பகுதியில் ஒருவர் இராணுவச் சிப்பாயினால் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பகல் யாழ். பஸ்நிலையப் பகுதியில் படையினருக்கும் பொதுமகன் ஒருவருக்குமிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தில் படையினர் துப்பாக்கியால் தாக்கியதில் பொதுமகன் தலையில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த எஸ்.தங்கராசா (வயது 55) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

சம்பவம் குறித்து ஆணைக்குழுவிடம் முறைப்பாடு எதுவும் செய்யப்படாதபோதும் அதுதொடர்பான விசாரணைகளை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா ஆரம்பித்துள்ளார்.

நேற்று யாழ். பொலீஸ் நிலையத்திற்குச் சென்று அவர் விசாரித்துள்ளார். தாக்கப்பட்ட பொதுமகனிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்.

தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படும் சிப்பாயை இவ்வார இறுதிக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு அழைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரா தெரிவித்துள்ளார். (ம-5)

## நாட்டு நடப்பு

### குவலயம் வியக்க வைத்தான்

சின்னதோர் குழல் எடுத்து
சிறப்புற வாயில் வைத்து
மண்ணில் பிறந்தோர் தம்மை
மயக்கி மன்னன் மாண்டான்.

கையிலே இசையோ - பொங்கும்
கருத்தினில் இசையோ - மின்னும்
மெய்யினில் இசையோ - மேனி
அசைவினில் இசையோ என்ன

"சரிகம பதநி" யோடு
'ச' என முடிந்து போகும்
குறுகிய சுரத்தினாலே
குவலயம் வியக்க வைத்தான்.

காலத்தால் அழிந்து போகா
கைக்குழல் நாதம் கேட்டோர்
ஓலமிட்டு அழுது நிற்க
உன்னை வானவர்கள் ஏற்றார்.

- விகடகவி.

## உயர் தொழில்நுட்ப நிறுவக கட்டடத்துக்கு காணி வாங்குவதற்கு புலிகளின் உதவி கோரப்படுகிறது

### மாணவர் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணிக் கொள்வனவுக்கு பங்களிப்புச் செய்யுமாறு நிறுவக மாணவர் ஒன்றியம் விடுதலைப் புலிகளின் தமிழீழக் கல்விக் கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1995ஆம் ஆண்டு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து பிரிந்து தற்காலிகமாக திருநெல்வேலியில் உள்ள முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கிய எமது நிறுவகம் 1997ஆம் ஆண்டுமுதல் 5 வருட குத்தகை அடிப்படையில் பலாலி வீதியில் உள்ள தனியார் வீடு ஒன்றில் இயங்கிவருகிறது.

இந்நிறுவனத்தில் நடைபெற்றுவரும் பகல், மாலை நேர வகுப்புகளில் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். நாட்டில் உள்ள ஏனைய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகளோ அவற்றில் காணப்படுகின்ற அடிப்படை வசதிகளோ எதுவுமின்றி நாம் விரிவுரைகளை மேற்கொள்கிறோம். அத்துடன், இலங்கையில் உள்ள ஏனைய நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பல கற்கை நெறிகள் எமது நிறுவனத்தில் அறிமுகப்படுத்தப்படாமலேயே உள்ளன.

தற்போது எமது நிறுவனம் இயங்கும் தனியார் வீட்டின் குத்தகைக் காலம் முடிவடைகிறது. இதிலிருந்து நாம் வெளியேற்றப்படுவோமாயின் எமது உயர் கல்வியும், எதிர்காலமும் பாதிக்கப்படும்.

எனவே, இந்நிறுவகத்துக்கென காணியைப் பெற்று கட்டடத்தையும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த மகஜரின் பிரதிகள் புலிகளின் அரசியல்துறை மற்றும் பொது அமைப்புகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (ம-173)

## பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் நேற்று யாழ்ப்பாணம் வருகை

### சட்டம், ஒழுங்கு பற்றி ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை31

இலங்கைக்கான பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் பீற்றர் ஹக்ஸ் தலைமையிலான அறுவர் கொண்ட குழு யாழ். குடாநாட்டிற்கு நேற்று விஜயம் செய்தது.

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றி அந்தக் குழு ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் பீற்றர் ஹக்ஸ் தலைமையில் வருகைதந்த இக்குழுவினர் நண்பகலில் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து யாழ். குடாநாட்டில் பணிபுரியும் பொலீஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினர். அதன் பின் யாழ்.நீதிமன்றத்துக்குச் சென்ற குழு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவை சந்தித்து நீதிமன்ற செயற்பாடுகள், பொலீஸாரின் செயற்பாடுகள் ஆகியன குறித்துக் குழு கேட்டறிந்தது.

தொடர்ந்து யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலைச் சந்தித்து, யாழ். மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் பற்றியும் -

குடாநாட்டுப் பகுதியில் கடமையாற்றும் பொலீஸார் சட்டம் ஒழுங்கை பேணுவது பற்றியும் -

இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் காவலரண்கள், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் மற்றும் சோதனைக் கெடுபிடிகள் பற்றியும் - கலந்துரையாடினர்.

இலங்கைக்கான பிரித்தானிய பிரதித்தூதுவருடன் சர்வதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் சிவில் மற்றும் பொலீஸ் ஆலோசகரான ஜியோப் பிரெட் மியரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டார். (ம-5)

## மத வழிபாட்டுத் தலங்களில் பலியானோர் விவரம் திரட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ். குடாநாட்டில் 1983 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை தேவாலயங்கள், கோயில்கள் மற்றும் மசூதிகளில் இருந்த சமயம் வன்செயல்களால் உயிரிழந்தவர்களின் விவரங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தினால் சேகரிக்கப்படுகின்றன.

இது தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனுப்புமாறு பிரதேச செயலகங்களை யாழ். செயலகம் கேட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் விவரங்களை மதகுருமார்கள், பொது மக்கள் எனத் தரம்பிரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

- இவ்வாறு மதவழிபாட்டுத் தலங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை முதலில் தரும்படியும் பின்னர் அவர்களது விவரங்களை அனுப்பி வைக்குமாறும் செயலகம் அறிவுறுத்தியுள்ளது. (ம-86)

### நாளை


ஆடி 16
வெள்ளிக்கிழமை
(01.08.2003)
திதி : திருதியை
முற்பகல் 10.50 வரை
நட்சத்திரம்: பூரம்
ஆடிப்பூரம்
முன்னிரவு 9.32 வரை
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பது கடினமானதுதான். ஆனால், தீயொழுக்கத்தால் ஏற்படும் துயரத்தைவிட கடினமானதல்ல.

## கலட்டி ஆலய தேரின் சிற்பங்கள், சிலை திருட்டு!

### ரூ.2 லட்சம் பெறுமதியுடையவை



வண்ணார்பண்ணை கலட்டி எச்சாட்டி மகமாரி அம்மன் ஆலய தேரில் உள்ள சிற்பங்கள் (களவாடப்பட்ட ஒரு பகுதி வெற்றிடமாகக் காணப்படுகிறது.)

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ். நகரப் பகுதியிலுள்ள வண்ணார்பண்ணை கலட்டி எச்சாட்டி மகமாரி அம்மன் ஆலயத் தேரில் உள்ள சிற்பங்கள் சில திருடப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 2 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

திருட்டுத் தொடர்பாக ஆலயத்தின் இளைஞர் கழகத்தினர் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

கடந்த வருடம் தேர் உற்சவத்தின்போது துணியினால் மூடிக்கட்டப்பட்ட தேர் இந்த வருட உற்சவத்துக்காக நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. அப்போதே சிற்பங்கள் திருடப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

சிற்பங்கள் திருடப்பட்ட போதும் இன்றைய தேர்த்திருவிழா தடையின்றி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆலயத் தேர்களின் சிற்பங்கள் திருடப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ம-6)

## இடம்மாற்றம்

**மனதுருக்கம் ~ இலங்கை**

இல.102, யாழ். புகையிரத நிலைய வீதியில் இயங்கிவந்த மேற்படி ஸ்தாபனம் ஆவணி மாதம் முதலாம் திகதியில் இருந்து இல.17, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி என்னும் முகவரிக்கு இடம்மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

மனதுருக்கப்பணியில்:
த.துரைராசா (இணைப்பாளர்)

(20816) (21-15-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வுபெற்ற மக்கள் வங்கியின் பிரதி முகாமையாளரும், எமது ஆலயத்தின் கணக்குகளை பிரதி உபகாரம் கருதாது பல வருடங்களாக ஆய்வு செய்து தருபவரும், பல சமய நிறுவனங்களின் உறுப்பினரும், பொது நல சேவையாளரும், சுதுமலை வடக்கைச் சேர்ந்தவருமாகிய

### உயர்திரு. சதாசிவம் தம்பித்துரை

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச. இளங்கோவன் முன்னிலையில் 2003-07-09 ஆம் நாள் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி, சீரும் சிறப்பும் பெற்று மேன்மேலும் பல தொண்டுகள் செய்து வாழ இணுவைக் கந்தன் அருள்புரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

தர்மகர்த்தா சபையினர்,
*இணுவில் கந்தசுவாமி கோயில்.*

இணுவில்.
(20866)(21-13-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் விளையாட்டுத்துறை ஆசிரியர்

### பி.முத்துச்சாமி

அவர்கள் அமரத்துவம் எய்தியதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

யா/உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வல்வெட்டித்துறை.
(20876)(21-15-18)

## 16ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், கிராம உத்தியோகத்தருமான

### திரு.க.உ.பேந்திரன்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கணபதிப்பிள்ளை மரகதேஸ்வரி

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும்,*
*அனைத்து உத்தியோகத்தர்களும்.*

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்.
பிரதேச செயலகம்,
தென்மராட்சி/சாவகச்சேரி.
(சி-29198)(21-15-18)

## பதினாறாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

பிறப்பு
14
06
1926
மலேசியா



இறப்பு
27
07
1987
இலங்கை

### அமரர் பொ.நா.கனகசபை

*(ஓய்வுபெற்ற நில அளவை உதவி அதிகாரி, தலைவர், ஐக்கிய நாணயசங்கம் - மாகியப்பிட்டி)*

திதி: 31.07.2003

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை நீர் வளர்த்து
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் புகலிடமாய்
குடும்பத்தின் குல விளக்காய்
என்றும் நீர் வாழ்ந்த நினைவுகள்
ஆண்டுகள் பதினாறு சென்றாலும்
எம் நெஞ்சை விட்டு அகலாது ஐயா!

தங்கள் பிரிவால் வாடும
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரன், மைத்துனர்,
மைத்துனி, பேறாமக்கள்.

*மாகியப்பிட்டி சந்தி,*
*சண்டிலிப்பாய்.*
(20858)(27-15-18)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

'நிக்கொட்' அமைப்பின் உதவித் திட்டத்தின்கீழ் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் 110 அடி நீளமும் 25அடி அகலமும் கொண்ட இருமாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகப் பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தெரிவித்தார். இக்கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ம-31)

## சட்ட வைத்திய அதிகாரி பற்றாக்குறை

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்வதற்கு சட்ட வைத்திய அதிகாரி பற்றாக்குறை காணப்படுவதனால் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனை செய்து வந்த ஒரேயொரு சட்டவைத்திய அதிகாரியான ஸ்ரீராஜேஸ்வரன் தற்போது நோய்வாய்ப்பட்டிருப்பதால் பணிக்கு சமுகமளிப்பதில்லை. இதனால், பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியை அழைக்க வேண்டிய நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-ரி)

## பிரதி அமைச்சர் உட்பட 6 பேருக்குப் பிணை

பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் உட்பட ஆறு பேரை மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் கடந்த திங்களன்று 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தது.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி ஏறாவூரைச் சேர்ந்த முஹம்மது இஸ்மாயில், அகம்மது லெப்பை, மொ.சா.இக்பால், மொ.சா.பைசார் ஆகியோரைத் தாக்கினர் எனவும் அவர்களது வீட்டைத் தாக்கி 12 ஆயிரம் ரூபா நஷ்டம் விளைவித்தனர் எனவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டி ஏறாவூர் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக ஒக்ரோபர் 6ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## ரயில் விபத்தில் மாணவர் பலி!

மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த ஆனந்தன் ருஷான் என்ற மாணவன் வெள்ளவத்தையில் ரயிலால் மோதுண்டு பலியானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த மாணவர் நண்பர்களுடன் தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பும போது ரயிலில் மோதுண்டார் என்று கூறப்பட்டது. (ம)

## தவறிவிட்டது

து.உதயகுமார் என்பவரது காப்புறுதிப்பத்திரமும் ஒரு தொகைப் பணமும் ராஜா தியேட்டருக்கும் வல்லை நாற் சந்திக்கும் இடையில் 29.07.2003 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வல்வெட்டித்துறை வேம்படியில் ஒப்படைக்க ... சன்மானம் வழங்கப்படும்.
T.P: 226-3298 (20874)(27-21-15-18)

## ENGLISH

SPOKEN AND GRAMMAR

**BY: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்
02.08.2003 சனி
சனி, ஞாயிறு மாலை 5.00மணி
(ப.நே.)
இடம்: கொக்குவில்
(ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
(C/29171) (27-21-15-18)

## இணையத்தளம்

உங்கள் கதைகள், கவிதைகள், கட்டுரைகளை இணையத்தில் பாதுகாத்துக் கொள்ள YARL.Com (தமிழ் வெப்தளம்).
தொடர்புகளுக்கு:
YARL.Com, HAUKETOVEI SC LEIL 51
1266, OSLO,
NORWAY.


## 20% - 25% தள்ளுபடி

COSMO
டீசல் ஜெனரேட்டர்ஸ்

- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை




மேலும் விபரங்களுக்கு:
செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட் II
516 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி: 337286, 337283-5, 324261-5

Access Graphics


## 15ஆவது விண்ணக வாழ்வின் நிறைவில்...!

மலர்வு
20
10
1969



உதிர்வு
31
07
1988

### செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

(உடுவில் மகளிர் கல்லூரி A/L மாணவி)

ஆண்டவன் அடியினை சேர்ந்து
ஆண்டுகள் பதினைந்து கடந்திடினும்
அடி மனதில் நிலைத்திருக்கும் - உன்
ஆழமான நினைவுகள் என்றும் எம் உயிருள்ளவரை.

அன்புடன்:
அப்பா, அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
மருமக்கள்.

இராமலிங்கம் வீதி,
உடுவில். (20836) (26-15-18)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1954
04
19



உதிர்வு
2001
07
23

### அமரர் மாணிக்கம் சுந்தரலிங்கம்

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு - ஆனால்
அப்பா என அழைக்க நீங்கள் இல்லையே!
அப்பா உங்கள் உடல் எங்களை விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது!
சீரும் சிறப்புடனும் எங்களை வாழவைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே! எங்கள் இதயம் எல்லாம்
நிறைந்து நிற்கும் உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை நாம் மறவோம்.

- மனைவி, றலினா,
பிள்ளைகள்: துவர்மன்,
சுபாகரன், கௌதமன்.

செபமாலை மாதாகோயிலடி,
உடுவில்.
(20821) (26-21-15-18)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21
01
1935



உதிர்வு
23
07
2001

### திருமதி சோதிப்பிள்ளை இராசதுரை

திதி: திருதியை

ஆண்டுகள் இரண்டும் ஆயிற்றோ அந்தோ நீர் பிரிந்து
ஈண்டு உம்மை நினைத்தே இப்பூவுலகில் வாழ்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளிவீசிய இல்லம் - இன்று
வேண்டாத இருளில் மூழ்கிவிட்டதே - அம்மா!

அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மலைவேம்படி,
அளவெட்டி. (20847)(21-15-18)

# கனடாவில் நடக்கும் 'ஸ்ரீலங்கா நாள்'; தமிழர் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு

ரொறன்ரோ,ஜூலை31

கனடாவில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள 'ஸ்ரீலங்கா நாள்' என்ற நிகழ்வுக்கு கனடாவில் வாழும் ஈழத் தமிழர்கள் மத்தியில் கடும் எதிர்புக் கிளம்பியுள்ளது. கனடா பல்கலைக்கழகத் தமிழ் மாணவர், பட்டதாரிகள் குழு இந்த நிகழ்வைப் புறக்கணிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையின்போது ஸ்ரீலங்கா அரசின் பூரண ஆதரவோடு தமிழினத்திற்கு எதிராக சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட பாரிய படுகொலை மற்றும் உடைமை அழிப்பு இவற்றின் இருபதாவது நினைவு நாள் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. பதின்மூவாயிரத்துக்கும் மேலான தமிழர்களை மிருகத்தனமான முறையில் வீதிகளில் எரித்தும், பச்சிளம் பாலகர்களை இரண்டாகப் பிளந்தும், பெண்கள், சிறுமியர்களைப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியும் பின் படுகொலை செய்தும் தனது இனவெறிப் பசியை சிங்களம் தீர்த்துக்கொண்ட நாள் அது. பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து சிங்களம் கோரவெறி ஆடிய நாள் அது.

அறப்போராட்டங்கள் மூலம் தமது உரிமைகளை வென்றெடுக்க முயன்ற தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட 1956, 1958, 1977, 1979, 1981 இனக்கலவரங்களின் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட 1983 ஜூலை இனக்கலவரம் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பூரண அனுசரணையுடன், அவர்களது படைகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். தமிழர் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் என்பன பற்றி அடையாளமிடப்பட்ட வாக்காளர் பதிவேடுகள் சிங்களக் காடையர்களுக்கு வழங்கப்பட்டே இக்கோரத்தனம் அரங்கேற்றப்பட்டது.

கறுப்பு ஜூலையை நினைவு கூரும் இச்சந்தர்ப்பத்தில் நாம் கனடாவில் நடைபெறவுள்ள ஒரு நிகழ்வு பற்றிய விடயத்தைக் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது.

இக்கறைபடிந்த கறுப்பு ஜூலையின் 20ஆவது நினைவு நாளின் சரியாக ஒரு மாதத்தின் பின்னர் ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதியை 'ஸ்ரீலங்கா நாள்' என்ற பெயரில் கொண்டாட ரொறன்ரோவிலுள்ள ஸ்ரீலங்காவின் நலன்பேண் பிரிவு (Consulate Office) ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கைத் தீவிலுள்ள சகல இனங்களும் இணைந்து ஒற்றுமையுடன் வாழ்கின்றனர் - குறிப்பாக தாயக மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்கின்றனர் - என்பதை எடுத்துக்காட்டவே இந்த நிகழ்வு நடத்தப்படுகின்றது.

இந்நிகழ்வை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை ஸ்ரீலங்காவின் நலன்பேண் பிரிவின பொறுப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட பூலோகசிங்கம் முன்னின்று ஏற்பாடு செய்து வருகிறார்.

அவரது நடவடிக்கைகள் யாவும் ஸ்ரீலங்காவில் இனங்களுக்கு இடையே சிக்கல்கள் எதுவும் இல்லை, அவர்கள் எல்லோரும் மிகவும் ஒற்றுமையாகப் பின்னிப் பிணைந்து இயல்பு வாழ்க்கை வாழ்கிறார்கள் என்ற மாயையைத் தோற்றுவிக்க எடுக்கப்படும் முயற்சியாகவே தென்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசுகள் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டம் காரணமாகவே 2,50,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் இங்கு புலம்பெயர்ந்தார்கள். ஸ்ரீலங்காவின் இரு இனங்களுக்கிடையேயான பகையென்பது ஏதோ உலகிற்குத் தெரியாத ஒன்றல்ல.

இரு இனங்களும் ஒற்றுமையாக இருந்தால் நோர்வே, ஜப்பான், கனடா உட்பட அனைத்துலக நாடுகள் இலங்கைத் தீவின் இரு தரப்பின் தலைமைகளிடையேயும் மாறிமாறிச் செல்ல வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காது.

இரண்டுதரப்பினருக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 17மாதங்களாகிவிட்டன. ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட விடயங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தாமல் ஸ்ரீலங்கா அரசு காலத்தைக் கடத்தி வருகிறது. ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களே நடைமுறைப்படுத்தப்படாதபோது, பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டவற்றின் கதி என்ன என்பதை நீங்களாகவே உணரமுடியும்.

ஸ்ரீலங்காவால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொடர்ச்சியான போர் காரணமாக 70,000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அப்பகுதிகளிற்கான புனரமைப்பு நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தமிழர் தாயகத்தை சிங்களப் படைகள் தமது ஆக்கிரமிப்பின் கீழேயே இன்னமும் வைத்துள்ளன. உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஸ்ரீலங்காப் படைகள் தமிழர்களின் குடியிருப்புக்களைத் தொடர்ந்து ஆக்கிரமித்து நிற்கின்றன.

மறுபுறத்தே, தமிழினத்தை மேலும் அழிக்கும் நோக்கோடு 20கோடி பௌண் செலவில் ஆயுதங்கள் இஸ்ரேலிடம் இருந்து வாங்கிக் குவிக்கப்படுகின்றன. உக்கிரேனிலிருந்து 3,000 இற்கும் மேற்பட்ட இரசாயன ஆயுதங்களும் வாங்கப்பட்டுள்ளன. பத்தாயிரம் பேரை இராணுவத்தில் புதிதாகச் சேர்க்கும் பணி தொடங்கியுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்த காலத்திலேயே ஸ்ரீலங்கா அரசு போர்க்கலங்களை, போர் ஆயுதங்களை வாங்குவதில் முனைப்புக் கொண்டுநிற்கிறது.

எனவே, இனங்களிற்கிடையே ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் முதலில் பூலோகசிங்கம் வடக்கு -கிழக்கின் மீது போடப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கும தமிழ்ப் பிரதேசத்தைவிட்டு இராணுவம் வெளியேறுவதற்கும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும். அதைவிடுத்து, ஸ்ரீலங்காக் குடியுரிமையைத் துறந்து, கனேடிய குடிமக்களாக மாறியுள்ள கனேடியத் தமிழர்களின் அலுவல்களில் தலையிடுவது வரம்பு மீறிய செயலாகும்.

அனைத்துலகமும் இரண்டு தரப்புக்களாக அடையாளம் கண்டுள்ள கொழும்பு, கிளிநொச்சித் தலைமைகள் இனச்சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு, நிரந்தர அமைதியை ஏற்படுத்தும்வரை தமிழர்களைக் கூறுபோடும் சதித்திட்டங்களை அவர் மேற்கொள்ளக்கூடாது.

ஒரு இராஜதந்திரி என்ற வகையில் செயலாற்றுவதே அவரது பதவிக்கு அழகான செயலாகும். விருந்துகளையும், விழாக்களையும் வைத்து ஒரு தன்மானத் தமிழனையும் விலைக்கு வாங்கமுடியாது.

எனவே, உணர்வுள்ள தமிழ் மக்கள் மற்றும் தமிழ் ஊடகங்கள் திரு. பூலோகசிங்கம் அவர்களால் நடத்தப்படும் 'ஸ்ரீலங்கா நாள்' மற்றும் இன்று நடக்க இருக்கும் ஊடகவியலாளர்கள் மாநாடு இரண்டையும் புறக்கணிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

# வாழைச்சேனை நகரை புனரமைக்க நீண்ட, குறுகியகாலத் திட்டங்கள்

வாழைச்சேனை நகரைப் புனரமைக்கும் பொறுப்பை நகர அபிவிருத்தி அதிகாரசபை ஏற்றுள்ளது. நீண்டகால மற்றும் குறுகிய கால திட்டங்களின் அடிப்படையில் புனரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் எம்.எச்.முஹம்மட் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாழைச்சேனை நகரில் புதிய பஸ் தரிப்பிடம், விளையாட்டு மைதானம், சந்தை கட்டடத் தொகுதி, வியாபார மத்தியஸ்தானம், சிறுவர் பூங்கா, வாசிகசாலை, மீன்பிடித்துறைமுகம், திரையரங்கு, வீடமைப்புத் திட்டம், பாசிக்குடாவில் உல்லாச விடுதிகள் அமைக்கும் திட்டம் ஆகியவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சுமார் 58 கோடியே 30 லட்சம் ரூபா செலவில் இந்த அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்துக்கு விடுதலைப் புலிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர் - என்றார்.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என்று செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டபோது, மீன்பிடி மற்றும் நீரியல் வள பிரதியமைச்சர் மொஹிதஷீன் அப்துல் காதர் கூறுகையில்,

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளை புலிகளின் ஒத்துழைப்பு இன்றி செய்யமுடியாது. இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு புலிகள் ஒத்துழைப்பு நல்கவேண்டும். சமாதான பேச்சுக்கள் தொடர்ந்தால் மட்டுமே வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். கடந்த வருடம் வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. நகர அபிவிருத்தி அதிகாரசபை, வாழைச்சேனை நகரை மீளக்கட்டியெழுப்ப எடுக்கும் முயற்சி வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும் - என்றார்.

இந்த மாநாட்டில் அமைச்சின் செயலாளர் கொள்கை திட்டமிடல் ஆலோசகர் அலி சாஹிர் மௌலானாவும் உரையாற்றினார். (ம)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனளிக்காது மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வாகனம் குடைசாய்ந்ததில் அதன் கீழ் அகப்பட்டு படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் யாழ்.வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மணல்காடு, உடதன்ன என்ற இடத்தைச் சேர்ந்த ஒனஸ்போல்ட் அமலதாஸ் (வயது-47) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இவர் பயணம் செய்துகொண்டிருந்த வாகனம் கடந்த 27ஆம் திகதி மணல்காட்டுப்பகுதியில் விபத்துக்குள்ளானது. வாகனத்தில் இருந்து கீழே வீழ்ந்த அமலதாஸ் மீது வாகன ரேடியேட்டரில் இருந்த கொதிநீர் கொட்டியதில் அவர் படுகாயமடைந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த இவர் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார். (ம-ரி)

# புலிகளின் வவுனியா அலுவலகம் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

கிளிநொச்சி,ஜூலை31

வவுனியாவில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைச் செயலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்து வவுனியா மாவட்டப் பொதுமக்கள் அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வொன்றியத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் பழைய பால்சபையாக இருந்த இடம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைச் செயலகமாக இயங்கி வருகிறது.

இந்த இடத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 11மணியளவில் பெரும் வெடிச் சத்தத்தைப் பொதுமக்களால் கேட்கக்கூடியதாக இருந்தது. இந்த வெடிச்சத்தம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு காரியாலயத்தில் நடந்ததாகவும் அறியமுடிந்தது.

இக்குண்டுத் தாக்குதலால் அரசியல்துறையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த தாக்குதலின் நோக்கம் என்ன? மக்கள் சமாதானத்தையும், அமைதியையும் விரும்பி எதிர்பார்த்து நிற்கும் இக்காலகட்டத்தில் இதுபோன்ற மக்கள் அருவருக்கத்தக்க இழிசெயலைச் செய்வோரை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- என அக்கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-5-9)

# சமாதானம் குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை31

'யுத்தம் இல்லாத சமாதானம் இன்றும் நாளையும்' என்னும் தலைப்பிலான மக்கள் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு கச்சேரியடியில் உள்ள யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வை.எம்.சி.ஏயின் சமாதானப் பணிக்குழு அதன் தேசிய சபையின் அனுசரணையுடன் நடத்தும் இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆர்வலர்களும் இந்த மக்கள் கருத்தரங்கில் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் நடத்தப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டியின்போது வெற்றியீட்டிய சிறுவன் ஒருவனுக்கு நல்லை ஆதீன முதல்வர் சான்றிதழ் வழங்குகிறார்.

யாழ். நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம், மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன், சித்த வைத்திய அதிகாரி எஸ்.சண்முகராஜா ஆகியோரும் அருகில் இருப்பதைப் படத்தில் காணலாம். (ம-10)

## சட்டவிரோத கட்டடங்களை அகற்ற பிரதேச சபை ஏற்பாடு

தெல்லிப்பழை,ஜூலை31

வலி.வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் காங்கேசன்துறை பிரதான வீதியில் சட்டவிரோதமான முறையில் விதிகளுக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் விரைவில் அகற்றப்படவுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபை தெரிவித்தது. (ம-150)

## பிணையில் விடுவிப்பு

தென்மராட்சி,ஜூலை31

மிருசுவில், தவசிகுளம் பகுதியில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் நடமாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வரையும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை வேல்முருகன், வேலுப்பிள்ளை அஜந்த், பொன்னுத்துரை ஜெகதீஸ்வரன், செல்லக்கண்டு புவனேஸ்வரன் ஆகிய நால்வரையும் தலா 2 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் தலா 5,ஆயிரம் ரூபா இரண்டு ஆள்பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான் தினமும் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார். அத்துடன், அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது 'எனவும் எச்சரித்தார். (ஒ-117)

## கருத்தரங்கு

'யுனிசெவ்' அமைப்பின் பிள்ளை நேய பாடசாலைத்திட்டம் தொடர்பான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

'யுனிசெவ்' அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பொறுப்பதிகாரி செல்வி செரீன் இந்நிகழ்வில் கலந்துகொள்வார். (ம-170)

## கைதடியில் இராணுவ ரோந்து அதிகரிப்பு

கைதடி,ஜூலை31

கைதடிப் பகுதியில் இரவு வேளைகளில் இராணுவத்தினரின் ரோந்துப் பணிகள் முன்னைய காலங்களை விட மிகத் தீவிரமாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுவேளைகளில் ரோந்து வரும் இராணுவத்தினர் குடியிருப்புக்களை அண்டியுள்ள பகுதிகளில் நீண்ட நேரமாகத் தங்கி நிற்கின்றனர். இதனால், பொதுமக்கள் இரவு வேளைகளில் தமது நடமாட்டத்தைத் தற்போது கட்டுப்படுத்திவருகின்றனர்.

கைதடி மேற்கு மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்கள் தற்போது விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன.

## நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய்,ஜூலை31

சங்கானை ஐக்கிய சனசமூக நிலையத்திற்கு தளபாடக் கொள்வனவுக்கென 2003-2004 ஆண்டுக் குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியின்கீழ் ரூபா 25ஆயிரத்தை மாவை.சேனாதிராசா ஒதுக்கியுள்ளார். (ம-135)

# அனுமதி இன்றி மதுபானம் விற்ற 11பேருக்கு ரூ.22 ஆயிரம் அபராதம்

## யாழ். நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,ஜூலை31

அனுமதிப்பத்திரம் இன்றி மது பானம் விற்பனை செய்த பதினொரு பேருக்கு யாழ்.நீதிமன்றம் 22ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

அரியாலையைச் வல்லிபுரம் சேர்ந்த சோதிநாதன், கோணாவளை வதி, கொக்குவிலைச் சேர்ந்த பாலச்சந்திரன் வால்காண்டீபன், அம்பலவாணர் வீதி, அரியாலையைச் சேர்ந்த கந்தையா ஜெயராம், தாவடி வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை விஜயகுமார், சாந்தி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்தையா யோக முத்து -

அன்னங்கைவீதி உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த கணபதி கணேசன், பொற்பதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சண்முகராசா மோகன்ராசா, மானிப்பாயைச் சேர்ந்த தம்பிராசா மனோரஞ்சன், திருநெல்வேலிச் சந்தியைச் சேர்ந்த செல்லையா தனபாலசிங்கம் மற்றும் பல்கலைக் கழக வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த வல்லிபுரம் பஞ்சநாதன் ஆகிய பதினொரு பேரும் அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்றமைக்காக தலா ஆயிரம் தண்டப்பணமும் தலா ஆயிரம் தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை - கசிப்பு விற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் கோண்டாவில் வடக்கு, அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இராசையா சிவானந்தராசாவுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்த உத்தரவிடப் பட்டது.

(ம-5)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜூலை31

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30மணிக்கு சிவநெறிப்புரவலர் இராசையா ஸ்ரீதரன் 'வள்ளிதிருமணம்' எனும் தலைப்பில் வில்லுப்பாட்டு நிகழ்த்துவார்.

(ம-5)

# தேசிய இரட்டையத் தின விழா ஓகஸ்ட் 23 இல் கொழும்பில்

கொழும்பு,ஜூலை31

இலங்கை இரட்டையர்கள் கலாசார மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய இரட்டையர்கள் தினவிழா எதிர் வரும் 23 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில், கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக மின்வலு சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவும், கௌரவவிருந்தினராக இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாந்துவும் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட அழைப்பின் பேரில் இலங்கைக்கான தாய்லாந்து நாட்டுத் தூதுவர் உட்பட மேலும் 500 பிரமுகர்களும் நிகழ்வில் கலந்து கொள்வர்.

பார்வையாளர்களாக சுமார் பத்தாயிரம் பேர்வரை எதிர்பார்க்கப் படுவதாக இந்த நிலையத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மேஜர் மஹிந்த ஹெற்றியாராச்சி கூறியுள்ளார்.

இந்த நிகழ்வின் போது ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி வருடாந்த இரட்டையர் தினமாக அமைச்சர் கரு ஜெயசூரியவினால் பிரகடனப் படுத்தப்படும்.

## அபராதம்

தென்மராட்சி,ஜூலை31

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சாவகச்சேரி நீதிமன்றினால் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கச்சாயைச் சேர்ந்த செல்லன் சிவராசா என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ம-10-117)

## ஆலயத்தில் திருட்டு

சுழிபுரம், பறாளை சிவசுப்பிரமணிய ஆலயத்தின் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டுப் போயுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு களஞ்சிய அறையின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் இயந்திரத்தை எடுத்துச் சென்றதுடன் ஆலயத்தில் இருந்த உண்டியல்களையும் உடைத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சங்கானை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-10-28)

## மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பு

மண்டைதீவு,ஜூலை31

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் பார்வைக் குறைபாடுடைய 6 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியை அவ்வூர் வர்த்தகர்களும், பொதுமக்களும் வழங்கியிருந்தனர். யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவி செல்வி நளாயினி மேற்கொண்ட செயற்றிட்ட ஆய்வின் மூலமே மாணவர்களின் பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்டது.

(ம-10-88)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியின் யாழ். மாவட்டப் பிரிவு அனுசரணையுடன் ஜப்பான் மருத்துவ வைத்திய சங்கம் (ஆசியா) நடத்தும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் எதிர்வரும் புதன், வியாழக் கிழமைகளில் காலை 9மணிமுதல் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

(ம)


அதிரடி விலையில்
அரிய சந்தர்ப்பம்!

★ தமிழ் ★ ஆங்கில வீடியோ படநாடாக்கள் நல்ல (புதிய) நிலையிலும் "NISSAN" BLUE BIRD - 1300 கார் உம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

ENGLISH PHARMACY
URUMPIRAY.

(20898)(15-14-16-31) 0777 242307.



உ
சிவமயம்



அருள்மிகு வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய



சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

*மெய்யடியார்களே!*

நிகழும் மங்களகரமான சுபானு ஆண்டு ஆடித்திங்கள் 16ஆம் நாள் (2003.08.01) வெள்ளிக்கிழமை காலை 7.16 மணி தொடக்கம் காலை 9.04 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபவேளையில் உடுப்பிட்டியூர் இசைத் தென்றல் L.S.ஜெயநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் எம்பெருமான் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற இறையருள் கூடியுள்ளது.

தலைமை: திரு.சி.சேகராஜசிங்கம் (ஆ.ப.தலைவர்)

நிகழ்வுகள்

○ வெள்ளோட்ட விழா: (ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரன்)
○ கலைஞர் கௌரவிப்பு: (நா.மகேந்திரன். S.கெங்காதரன்.க.இராசநாயகம்)

இறைவணக்கம்

ஆசியுரை

நல்லை ஆதீன முதல்வர் இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பிரம்மஸ்ரீ அ.ரவீந்திரசர்மா [ஆலய பிரதமகுரு]
மாண்புமிகு திரு.தி.மகேஸ்வரன் (நா.உ.) இந்து விவகார அலுவல்கள் அமைச்சர்
திரு. சே.ஸ்ரீநிவாசன் [பிரதேச செயலர் - கோப்பாய்]

பாராட்டுரை: திரு.ப.ஜோதீஸ்வரன் B.A.Dip. in Ed.

○ வெள்ளோட்ட விழா மலர் வெளியீடு

ஆசியுரை: கலாநிதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்.
[கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்]

வரவேற்புரை: சைவப்புலவர் மா.பாலேந்திரம் - ஆசிரியர்.

தலைமையுரை: விஷ்ணுப்ரியா [மா.கிருஷ்ணகாந்தன்]

வெளியீட்டுரை: கலாநிதி அ.சண்முகதாஸ்
[தலைவர் - தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

மலர் வெளியீடு: முதன்மைப் பிரதி பெறுநர் திரு.தெய்வேந்திரம் சுதாகர்
[கணேசா ஹாட்வெயார் ஸ்ரோர்ஸ்]

சிறப்புப் பிரதிகள் வழங்கல்

ஆய்வுரை: கவிஞர் சோ.பத்மநாதன்
[முன்னாள் முதல்வர் - ஆசிரியர் கலாசாலை, பலாலி]

வாழ்த்துரை: கலாநிதி எஸ்.சிவலிங்கராசா
[தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்]
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
திருமதி நாச்சியார் செல்வநாயகம்
[துணைவா, இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

நிறைவுரை: சிவநெறித்தவமகன் ஆறு. திருமுருகன்

நன்றியுரை: திரு.சோ.மகேஸ்வரன் [செயலாளர்,ஆ.ப.ச.]

தொகுப்புரை: திரு.சி.க.லோகநாதன் [பொருளாளர், ஆ.ப.ச.]

அடியார்கள் அனைவரையும் வெள்ளோட்ட விழாவிற் கலந்து எம்பெருமான அருளாசி பெற்றுய்யும் வண்ணம் பணிவோடு அழைக்கின்றோம்.

(20894) (25-14-16-31) - ஆலய பரிபாலன சபை.



யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி

பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல்

காலம்: இன்று (31.07.2003) வியாழக்கிழமை மாலை 4.30 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்

வெளிநாடுகளிலிருந்து தற்போது இங்கு வருகைதந்துள்ள வித்தியாலயத்தின் பழைய மாணவர்களும் ஆர்வமுள்ள ஏனைய பழைய மாணவர்களும் குறுகிய காலத்தில் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம். - *செயலாளர்.*

(சி.29211) (25-14-16-31)



உடன் தேவை

மின்சாரப் பொருள்கள், இலத்திரனியற் பொருள்களில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் உடன் தேவை.

*நேரில் வரவும்.*

JAFFNA ELECTRICALS
ABANS SHOW ROOM,
141, Power House Road,
Jaffna.

(சி-29212) (31-14-16)



STUDY IN INDIA

இந்தியா Bangalore University இல் B.Sc, BCA, M.C.A. ஆகிய பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15 நாட்களுக்குள் Admission, Visa பெற்றுக் கொடுக்கப்படும். 30ஆம் திகதி University ஆரம்பமாக உள்ளதால் 5ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

யுனிவெக் (UNIVAC)
வட்டு, இந்துக்கல்லூரி வீதி,
சித்தன்கேணி.

சாருஜன் கொமினிக்கேசன்
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில்.



அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை

ஆடிப்பூர அன்னதானம்

*அம்பிகை அடியார்களே!*

நாளை (01-08-2003) வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானம் வழங்க எமது சபையினர் சகல ஒழுங்கினையும் செய்துள்ளனர்.

அன்றையதினம் அடியார்களின் பிரயாண வசதி கருதி முற்பகல் 11.00 மணிக்கு அன்னதானத்தை ஆரம்பிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். எனவே, அடியார்கள் அன்னதானசபை மண்டபத்துக்கு வருகைதந்து அன்னதானத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபையினர்.

(20897)(19-14-16-31)



16ஆம் நாள் நினைவஞ்சலி



அளவையூர் கலாசூரி
அமரர்
N.K. பத்மநாதன்

தோற்றம் 19-09-1931 மறைவு 15-07-2003

அன்போடு என்னை ஆதரவாய் அரவணைத்து
அன்பு மொழி பேசிய அழகு முகம் மறைந்ததோ?
இன்முகம் காட்டி எம் இதயத்தில் இடம்பிடித்த
என் ஆசைக் குருவே நீங்கள் சென்ற இடம் தான் எதுவோ?
இன்று உங்கள் முகம் மறைந்து பதினாறாம் நாளும்
ஆனதோ?
என்றுமே என்னுடன் நீங்கள் இணைந்தே இருப்பதால்
என் இதய அஞ்சலியைச் செலுத்துகின்றேன் இன்று.

K. குமாரதாஸ் நாகதீபன்.

*கல்வியங்காடு.* (20896) (21-14-16-31)





உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA. TEL: 021-222-5766

(14-16-31) (சி-29262)

# மக்கள் மீது அரசுக்கு அக்கறை இருப்பின் எரிபொருள் விலை குறைந்திருக்கும்!

அரசு நமது நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை உண்மையான அனுதாபத்துடன் அணுகுமானால் மன்னார் கடலில் பெற்றோலியம் கிடைக்கும் வரையிலோ உலகச் சந்தையில் எண்ணெய் விலை குறைவடையவோ காத்திருக்காது எரிபொருள்களை நியாயமான விலையில் மக்களுக்கு வழங்க முடியும் என்கிறார். உதய பிரபாத் கம்பன்பில் "லங்காதீப" வார இதழில் பிரசுரிக்கப்பட்ட அவரது கட்டுரையின் தமிழ் வடிவம் இது. (கட்டுரையில் குறிப்பிடப்படும் விலைவிவரங்கள் தென்னிலங்கையை அடிப்படையாகக்கொண்டவை)

மேற்குக் கடல் பிரதேசமான மன்னார் கடல் பிராந்தியத்தில் எண்ணெய் வளம் உள்ளதாகவும் அதைப் பெற முனைந்தால் மக்களுக்கு நியாய விலையில் எரிபொருள்களை வழங்க முடியுமெனவும் நாடாளுமன்றத்தில் அமைச்சர் கருஜயசூரிய பிரஸ்தாபித்திருந்தார். இதனைச் செவிமடுத்த நமது மக்களுக்கு அரசின் மேல் மிகுந்த பற்று ஏற்பட்டிருக்கக் கூடும். வளைகுடா நாடுகளில் உள்ளோரைப் போன்று எரிபொருள்களைத் தாமும் தாராளமாகப் பாவிக்கலாமென்று கனவு கூடக் கண்டிருப்பார்கள். எனினும் அரசு நினைத்தால் இன்றிலிருந்து கூட எரிபொருளை நியாய விலையில் விற்பனை செய்யமுடியும். இதைச் செயற்படுத்துவதற்காக மன்னார் கடலில் எண்ணெய் அகழ்வதற்கோ மற்றும் உலகச் சந்தையின் எண்ணெய் விலை வீழ்ச்சியடைவதற்கோ காத்திருக்கத் தேவையில்லை. தேவைப்படுவது நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவினங்களைப் பற்றிய உண்மையான அனுதாபமேயாகும்.

எரிபொருள்களின் விலை உயரும் போது போக்குவரத்துக்கான செலவினங்கள் உயரும். இதன்பயனாக சகல பாவனைப் பொருள்களின் விலையிலும் மாற்றம் ஏற்படும் சுருங்கக் கூறின எரிபொருள் விலை உயரும்போது வாழ்க்கைச் செலவினமும் உயரும் என்பதுதான். இது தவிர தொழிற்சாலைகளின் இயந்திர சாதனங்கள் முற்றிலும் டீசல் போன்றவற்றாலேயே இயங்க வேண்டியுள்ளதோடு, கிராமங்களின் இரவுகளை ஒளிபெறச் செய்வது முற்றிலும் மண்ணெண்ணெயிலேயே தங்கியுள்ளது. மேலும் அன்றாட போக்குவரத்து நடைமுறைகள் முற்றிலும் எரிபொருள்களிலேயே தங்கியுள்ளன. அத்தோடு, நகர்ப் புறங்களின் சமையல் எரிவாயுவின் விலையும் மக்களைப் பாதிக்குமளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஏனெனில், எரிவாயுவும் பெற்றோலியத்தின் ஓர் உப உற்பத்தியேயாகும். இதனால், எரிபொருள் விலை உயரும் போது வாழ்க்கைச் செலவும் உயரும் என்பதற்கான மேலதிக விளக்கங்கள் தேவையற்றதாகும்.

மேலும் பெற்றோலியப் பொருள்களின் விலை உயர்வின் பிரதிபலிப்புகள் இன்னும் நிறையவே உள்ளன. இதன்படி ஆசியாவிலேயே உயர்ந்த மின் கட்டணங்களுக்கு எம்மை உட்படுத்திய மகிமை, டீசல் விலையுயர்வுக்கு உண்டு. மேலும் அதிகரித்த உற்பத்திச் செலவினங்களால் ஏற்றுமதிச் சந்தையில் எமது உற்பத்திகள் போட்டியிட முடியாத நிலை உள்ளது. இக்காரணத்தை முன்னிட்டே அரசின் பெரும் கனவாக இருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் முயற்சிகள் வெறும் கனவாக மட்டுமே போனது. இவ்வகையில் ஆராயும் போது இயக்க சக்திகளுக்கான விலை உயர்வு வாழ்க்கைச் செலவுப் பாதையை மாத்திரம் அல்ல பொருளாதார நலன்களுக்கு பல வழிகளில பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. ஆனால், எமது நாட்டின் எரிபொருள் விலையுயர்விற்கு உலகச் சந்தையைக் காரணங்காட்டுவதே எமது அரசியல் வாதிகளுக்கு வழக்கமாகியுள்ளது. எனினும் உண்மையில் வாழ்க்கைச் செலவின உயர்விற்கு உலகசந்தையில் எண்ணெய் விலை உயர்வு ஒரு காரணியாக அமையாது என்பதையே இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் பிரசுரிக்கப்படும் ஆங்கில நாளேடு ஒன்றில் வெளியாகும் பெற்றோலிய எண்ணெய் விலை நிர்ணய அட்டவணைப்படி 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 1 லீற்றர் மசகு எண்ணெயின் உண்மையான விலை சுமார் 18 ரூபாவாகும். (கடந்த யுத்த கால நிலைவரங்களினால் எண்ணெய் விலையில் கூடிய ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டதால் ஜனவரி மாத விலையே தரப்பட்டுள்ளது) அப்படியிருந்தும் அன்று ஒரு லீற்றர் பெற்றோல் மூன்று மடங்கு விலையான 50 ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளது. இது பெரும் புதிராக இருந்தது. ஏனெனில் 1லீற்றர் மசகு எண்ணெயைச் சுத்திகரிக்க பெரும் செலவு ஏற்படுவதாலேயே 1 லீற்றர் பெற்றோல் 50ரூபாவுக்கு விற்கப்பட்டது என்பதை நம்ப முடியவில்லை. இதனால், இதைப்பற்றி மேலும் அறிய முயன்றபோது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்படும் எண்ணெயும் - ஸ்ரீலங்காவும் என்ற புள்ளிவிவர விவரணப் புத்தகமொன்றை பார்க்க நேர்ந்தது. அதில் பலவிதமான விவரங்கள் இருந்தபோதிலும் முக்கிய விவரமான ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யாக மாற்ற ஆகும் சுத்திகரிப்புச் செலவினம் எவ்வளவு? என்ற விவரம் இருக்கவில்லை. இதனால் எனது உற்சாகம் சந்தேகமாக மாறியது. இச்சந்தேகத்தை பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் உயர்பதவியிலிருந்த ஓர் உத்தியோகத்தரின் அனுசரணையால் நிவர்த்திசெய்ய முடிந்தது. அதன்படி சில விவரங்களை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

உண்மையில், 1லீற்றர் மசகு எண்ணெய் மூலம் 1 லீற்றர் பெற்றோலைப் பெற 1 ரூபா 95 சதம் மட்டுமே செலவாகிறது. இது 18 ரூபாவோடு சேரும் போது முழுச் செலவினம் 19 ரூபாய் 95 சதமாகவே இருக்கும். ஆனால், 1 லீற்றர் பெற்றோல் 50 ரூபா அல்லது அதற்குக் கிட்டியவிலையிலேயே விற்கப்பட்டது. இதன் மூலம் அரசு பெரும் இலாபமொன்றைப் பெற்றுக் கொண்டுதான் பெற்றோலை விற்பனை செய்வது புலனாகிறது. இதைவிடவும் 1 லீற்றர் பெற்றோலுக்கு கடன் வட்டியாக 2 ரூபாய் 43 சதம் செலுத்தப்படுகிறது. ஆனால், இவ்வட்டி ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளின் பயனாக ஏற்பட்டதாகும். இருந்தபோதும் இவ்வட்டிக் கட்டணத்தையும் சேர்த்து மதிப்பீடு செய்யும் போது 1 லீற்றர் பெற்றோலின் உற்பத்திக்கான செலவு 22 ரூபாய் 43 சதமேயாகிறது.

மேலும் பெற்றோலைக் கூடிய விலைக்கு விற்பதாலேயே டீசல் நியாய விலையில் விற்கப்படுகிறது என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். எனவே, டீசலின் உற்பத்திச் செலவையும் சற்று ஆராய்வது நல்லது. இதன்படி உற்பத்திச் செலவோடு விநியோகச் செலவினத்தையும் சேர்க்கும போது 1லீற்றர் டீசலின் விலை 14 ரூபாய்களே ஆகின்றது. அதுவும் பெற்றோல் விற்பனையைப் போன்றே உற்பத்திச் செலவின் இருமடங்கான 29 ரூபாய்களுக்கு விற்கப்படுகிறது.

இதன்படி ஈட்டப்படும் இலாபத்திற்கு என்ன நடந்துள்ளது? வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு தருவிக்கப்படும் மசகு எண்ணெய்க்கான இறக்குமதித் தீர்வையாக 30 சதவீதமான தொகையை அரசு எடுத்துக்கொள்கிறது. இன்று கூட்டுத்தாபனத்திலிருந்து 30 சதவீதமாக அறவிடப்படும் இத்தீர்வை 35 சதவீதமாகவும் 45 சதவீதமாகவும் ஒரு காலகட்டத்தில் அறவிடப்பட்டுள்ளது. மற்றும் 2002 ஆம் ஆண்டில் சுமார் 1670 கோடி ரூபாவும் 2001 ஆம் ஆண்டில் 1295 கோடி ரூபாவும் இத்தீர்வைகள் மூலம் அரசு பெற்றுக்கொண்டுள்ளது. இதே போன்று 2002 இல் ஒரு விசேட அறவிடுதல் மூலமாக மசகு எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திடமிருந்து அரசு பெற்றுக்கொண்ட தொகை மாத்திரம் 330 கோடிகளாகும். இவை தவிர்ந்த 20 சதவீத பெறுமதிசேர் வரிமூலமாகவும் ஒரு தொகை திரும்பவும் அரசினால் அறவிடப்பட்டு வருகிறது.

சிகரட் மற்றும் மதுபானவகைகள் போன்று எரிபொருள்களையும் தேவையேற்படின் எவ்வளவு விலை கொடுத்தும் வாங்குவதற்கு மக்கள் தயங்கமாட்டார்கள், என்பதை நன்குணர்ந்துகொண்டே அரசு எரிபொருள்களுக்கு இவ்வளவு தொகை அறவீடுகளை விதித்துள்ளமை தெரிகிறது. இவ்விதம் வரி அறவிட்டும் எஞ்சியயுள்ள சிறு தொகையிலும் அரசின் செலவினங்களை ஈடுசெய்வதற்கான அரசின் தனிப்பட்ட நிதிக்கும் கூட்டுத்தாபன இலாபத்தின் கணிசமான அளவு சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இவ்வளவு மேலதிக இலாபங்களைப் பெறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டமடைந்துள்ளமைக்கு மோசடி, ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளே காரணங்களாகும்.

அடுத்து வாழ்க்கைச் செலவை நேரடியாகப் பாதிக்கும் இயக்க சக்தியான மின்துறையை எடுத்துக் கொள்ளலாம். இங்கும் பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளமை தெரியவருகின்றது.

வரட்சியைக் காரணம் காட்டி 2001 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் டீசல் மூலம் இயங்கும் மின் பிறப்பாக்கிகளினால் கட்டணம் செலுத்திப் பெறப்படும் அவசர மின் சக்தியைக் காரணம் காட்டி மின் கட்டணம் நூற்றுக்கு 30 சதவீதம் உயர்த்தப்பட்டது. ஆனால், 2002 ஆம் ஆண்டு மே மாதம் மின் உற்பத்திக்கான இலங்கையின் சகல நீர்த் தேக்கங்களும் நிரம்பி வழியுமளவுக்கு மழை வீழ்ச்சி காணப்பட்டது. இந்நிலை 2003 ஆம் ஆண்டு ஆரம்பமாகும் வரையில் நாடு நீரில் மூழ்குமளவுக்குத் தொடர்ந்தது.

இதன் மூலம் கடந்த 14 மாதங்களாக நாட்டில் மின் சக்தி வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அனைத்து நீர்த்தேக்கங்களும் பூரணமான நீமட்ட நிலையில் இருந்துள்ளன. ஆகவே கட்டணம் செலுத்திப் பெறப்படும் மின சக்தி நிறுத்தப்பட்டு, உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணங்கள் மறுபடி குறைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை. மின் அலகொன்றுக்கு 8 ரூபா முதல் 11ரூபா வரையிலான கூடிய விலை கொடுத்து டீசல் மூலமாக இயங்கும் மின் பிறப்பாக்கிகளினால் பெறப்படும் மின்சக்திக்குச் செலுத்தப்படும தொகையில் கணிசமான அளவு, பொ.ஐ. முனணியின் பெரும் புள்ளிகளைச் சென்றடைந்ததாக கடந்த ஆட்சிக்காலத்தில் எமது காதுகளுக்கு தகவல் எட்டியுள்ளது. தற்போது அதில் ஐ.தே.மு. அரசின் பெரும் புள்ளிகளுக்கும் பங்கு உள்ளதா? என்ற சாதாரண மானதொரு ஐயம் தோன்றுகிறது.

மேலும் உலகளாவிய ரீதியில் நோக்கும்போது எமது நாட்டின் மின் விநியோகத்தின் போது நூற்றுக்கு 10 சதவீதமான மின்சாரம் மின் கசிவு காரணமாக வீணாகிறது. இவ்வித இழப்பின் நஷ்டச் சுமையையும் மக்களே ஏற்கவேண்டியுள்ளது.

**- சரா -**

இவற்றை நோக்கும்போது வாழ்க்கைச் செலவின உயர்வு அரசின் கூற்றுக்கு அமைய உலக சந்தையின் நடைமுறைகளால் ஏற்படுத்தப்படுவது அல்லவென்பதும் அரசின் சுரண்டுதல், நிர்வாகச் சீர்கேடு மற்றும் ஊழல்கள் என்பனவே இதற்கான காரணிகளாகும் என்பதும் தெளிவாகின்றது.

ஆகவே, எரிபொருள் மற்றும் மின் சக்தியின் விலை உயர்வைக் குறைத்து வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துதல், ஏற்றுமதியை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கான கவர்ச்சியை ஏற்படுத்தல் போன்றவை செயற்படுத்தப்பட வேண்டுமாயின் அரசு மேற்குறிப்பிட்டுள்ள சகல சீர்கேடுகளையும் நீக்கவேண்டும். இருப்பினும் மன்னார்க் கடற் பிராந்தியத்தின் எண்ணெய் வளம் கிடைக்கும் வரையில் பார்த்திருப்பதை விட மேற்கூறியுள்ள கருத்துக்களை முன்னிட்டு நடத்தப்படும் ஒரு மக்கள் எழுச்சியின் மூலமாக இயக்க சக்திகளின் விலையுயர்வைக் குறைக்கச் செய்வது இந்நாட்டு மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ✶

---

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்துக்கு

## தரமற்ற உலர் திராட்சைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு,ஜூலை31

ஆயுர்வேத மருந்து உற்பத்திக்காக இந்தியாவிலிருந்து உலர்ந்த திராட்சைகளை ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் தருவித்ததில் ஊழல் இடம் பெற்றிருப்பதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருந்து உற்பத்திக்காக இந்தியாவிலிருந்து சுமார் 12 லட்சம் ரூபாவுக்கு 10 ஆயிரம் கிலோ உலர்ந்த திராட்சை இறக்குமதி செய்யப்பட்டது. இந்தக் கொள்வனவில் கேள்விப் பத்திரங்கள் கோரும் நடைமுறை எதுவும் பின்பற்றப்படவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட உல்ர்ந்த திராட்சைகள் வண்டரித்த - தரமற்ற - நிலையிலேயே உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவராலேயே இந்தக் கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்காக இந்த அதிகாரி இந்தியாவிற்கு பிரத்தியேகப் பயணமொன்றையும் மேற்கொண்டமை தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் வந்து சேர்ந்த இந்த உலர்ந்த திராட்சைகளை முகத்துவாரத்தில் உள்ள மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் குளிர்பதனக் களஞ்சியத்தில் சுமார் 6 மாதகாலம் களஞ்சியப்படுத்த மாதமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபா கட்டணமாகச் செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வண்டரித்த நிலையில் காணப்படும் உலர்ந்த திராட்சையின் தரமற்ற தன்மையை சீர்செய்யவே குளிர்பதனக் களஞ்சியத்தில் சிறிது காலம் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டதாக விவரமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆயுர்வேதக் கூட்டுத்தாபன நிர்வாக சபையின் அனுமதியைப் பெறாது உலர் திராட்சை கொள்வனவை மேற கொண்டதன் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு சம்பந்தப்பட்ட அதிகாரி நஷ்ட மேற்படுத்தியுள்ளதாகவும் -

அதனால் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் - ஆயுர்வேதக் கூட்டுத்தாபன மருத்துவர்கள் அரசிடம் கோரியுள்ளனர் - என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

---

## முல்லைத்தீவு மாவட்ட முறைப்பாடுகளை விசாரிக்க வவுனியா நீதிமன்றுக்கு அனுமதி

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்று மற்றும் மாவட்ட நீதிமன்று ஆகியவற்றுக்கான நீதிபதியாக வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியனை நீதிச்சேவைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது. நாளை முதல் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது.

முல்லை மாவட்டத்தில் இடம் பெறும் முறைப்பாடுகள், திடீர் மரணங்கள், கடல் மற்றும் தரையில் இடம் பெறும் கைதுகள் போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வவுனியா நீதிபதிக்கு வழங்கப்படுவதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஏ-9 வீதியில் இடம் பெறும் திடீர் விபத்துக்கள், மரணம் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரமும் மரண விசாரணை நடத்தும் அதிகாரமும் வவுனியா நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ம)

---

## தூங்கிக் கொண்டிருந்த பெண்ணின் தாலி நள்ளிரவில் 'நைஸாக' திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை31

நள்ளிரவு நேரம் வீட்டினுள் புகுந்த திருடர்கள் தூங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்திலிருந்த தாலிக் கொடியை 'நைஸாக' அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர்.

கல்வியங்காடு வாசிகசாலை வீதியில் உள்ள பொன்னம்பலம் பாலச்சந்திரன் என்பவரின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்விநியோகத்தை துண்டித்துவிட்டு வீட்டின் புகைக்கூண்டு வழியாக உள்நுழைந்துள்ள திருடர்கள் வாயில் கதவுகளை ஆயத்தமாகத் திறந்து வைத்துவிட்டு தூங்கிகொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட வீட்டுக்காரர்கள் கூக்குரலிட்ட போதும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லை என்று கூறப்பட்டது.

(ம-180)

---

## வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து கட்சிகளின் தலைவர்களது கருத்து

### அறிய ஜனாதிபதி தீர்மானம்

கொழும்பு,ஜூலை31

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் இணைப்பைத் தொடர்வதா இல்லையா என்பது குறித்து சகல அரசியல் கட்சித் தலைவர்களதும் கருத்துக்களைப் பெறுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக 'லங்காதீப' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கட்சித் தலைவர்களின் கருத்தை அறிந்த பின்னரே வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஜனாதிபதி தனது உறுதியான முடிவை அறிவிப்பார் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக சட்டவல்லுநர்களின் ஆலோசனைகளையும் ஜனாதிபதி பெற்று வருகின்றாராம்.

வடக்கு - கிழக்கை பிரிக்குமாறு கிழக்கிலுள்ள சிங்கள இனவாத அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளமை முக்கியத்துவம் பெறுகின்றது.

வடக்கில் இருந்து கிழக்கைப் பிரிப்பதற்காக சிங்கள அமைப்பொன்று கையெழுத்து வேட்டையில் இறங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலை தொடர்பான விவரமான அறிக்கை ஒன்றை பாதுகாப்பு துறையின் சிரேஷ்ட அதிகாரிகளிடம் இருந்து ஜனாதிபதி பெற்றுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

# சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனிக் கல்விக் கற்கைநெறி

கணனிக்கல்வியில் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் கற்கைநெறியை ஜோன் கீல்ஸ் நிறுவனத்தகவல் தொழில் நுட்பப் பிரிவுடன் இணைந்து யாழ். ஐ.ஐ.எஸ். நிறுவனம் குடாநாட்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கற்கை நெறியின் அறிமுக நிகழ்வு அண்மையில் யாழ். ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் அலுவலகத்தில் இடம்பெற்றது. அங்கு ஜோன் கீல்ஸ் நிறுவன இயக்குநர் சுஜீவ கூரே இக்கற்கை நெறி குறித்து விளக்கிக்கூறினார்.

அவர் கூறியதாவது:-

எமது நிறுவனம், கணனிக் கல்வியில் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழை வழங்கும் கற்றை நெறியை இங்கு அறிமுகப்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக வழங்கப்படவுள்ள, தேசிய தரம் மிகக இக்கற்கை நெறியானது, லண்டனிலுள்ள 'சர்வதேச எடெக்செல்' என்ற அமைப்பினால் முகாமை செய்யப்படுகிறது. ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்கள் 18 மாதங்களை மட்டும் கொண்ட இக்கற்கை நெறியைப் பயில்வதன் மூலம் சர்வதேச ரீதியில் அநேக பல்கலைக்கழகங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மூன்று வருடப் பட்டப்படிப்புக் கற்கையில் இரு வருடங்களை விலக்குப் பெற முடியும். பி.எஸ்.ஸி. கற்றை நெறியில் இறுதி ஒரு வருடத்தை மட்டும் பூர்த்தி செய்து பட்டத்தைப் பெறமுடியும்.



இக்கற்றை நெறியை யாழ்ப்பாணத்தில் முன்னெடுப்பதற்காக ஐஐஎஸ் நிறுவனம் எம்முடன் இணைந்துள்ளது. கல்விபயிலும், தொழில்புரியும் அனைத்துத் தரப்பினரதும் வசதியைக் கருத்திற்கொண்டு வாரநாள்களிலும் வார இறுதி நாள்களிலும் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பட்டப்படிப்புக் கற்கைக்காக தற்போது லண்டன், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. விரைவில் அந்த ஒரு வருடகாலக் கற்றை நெறி கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படவுள்ளது. உயர் தேசிய டிப்ளோமாவில் திறமையாகச சித்தியடையும் மாணவர்களுக்கு லண்டன் பல்கலைக்கழகங்கள், பட்டப்படிப்புக் கற்றை நெறிக்கென புலமைப் பரிசில்களை வழங்கிவருகின்றன.

ஆங்கில மொழியில் இக்கற்றை நெறி இடம்பெறுவதால் விசேட ஆங்கிலமும் கற்பிக்கப்படும். இவ்வருட அணியில் ஆகக்கூடுதலாக 40 மாணவர்களே இணைத்துக்கொள்ளப்படுவர். மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் ஐ.ஐ.எஸ். நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும். - இப்படி அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் வியாபார அபிவிருத்தி முகாமையாளர் ரணில் ஹெரத், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் டில்சாட் சடிக் மற்றும் ஐ.ஐ.எஸ்.அமைப்பின் இயக்குநர் கே.விக்னேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-9-ரி)




## ஜேர்மனியத் தொழில்நுட்பம்! சர்வதேச தரம்!!

# ஐ.சி.சியின் கொங்கிறீட் கட்டிகள் மீண்டும் இலங்கைச் சந்தையில்!

உட்துளைகளுடன் முன் கூட்டியே அழுத்தித் தயாரிக்கப்பட்ட கொங்கிறீட் கட்டிகள் மீண்டும் நிர்மாணிப்புத் துறைக்கு அறிமுகமாகியுள்ளன. நாட்டின் மிகப்பெரும் நிர்மாண நிறுவனமான சர்வதேச நிர்மாணிப்புக் கூட்டமைப்பு (ICC) இதனைக் கடந்தவாரம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்பத்துடன் சர்வதேச தரத்தில் முன்னரே கட்டியுருவாக்கப்பட்ட இந்தக் கட்டிகள் நிர்மாணிப்புச் செலவினத்தை 30 சத வீதத்தினால் குறைக்க உதவும்.

விசேடமாக மாடிக்கட்டடங்கள் விடயத்தில் இவற்றின் அனுகூலத்தைப் பெறலாம். நேரம், சிக்கனம் ஆகியவற்றின் ஊடாக மறைமுகமான செலவினக் குறைப்பு அனுகூலங்களையும் அடைதல் சாத்தியம் என நிறுவனம் தெரிவிக்கிறது.

தரைப்பகுதியின் வீச்சளவு 10 மீற்றர்களால் அதிகரிப்பது, வாணிபத் தேவைகளுக்கான பல மாடிக் கட்டடங்கள் உருவாக்கலை இலகுவாக்குவதற்காக நிர்மாணிப்புத் துறை சார் வல்லுநர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

ஜேர்மன் தொழில்நுட்பம் கொண்டு மட்டக்களப்பில் அமைந்துள்ள நிறுவனத்தின் வேலைத்தளத்தில் இக்கட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றினால் நேரமும், பணமும் மீதப்படுத்தப்படுகின்றன. அத்துடன், விரிவான முறையில் திட்டமிடுவதற்கும், நிர்மாணிப்பதற்கும் உதவுகிறது. கட்டி முடிந்த பின் பூசிமெழுகுவதன் அவசியம், சாரக்கட்டு கட்டும் அவசியம் என்பன இல்லை என்று பணிப்பாளர் வஜிர நாகொடவிதான தெரிவித்தார்.

கட்டிகள் ஒவ்வொன்றும் 40 சத வீதம் உட்குழிவும், 1.2 மீற்றர் அகலமும், 10 மீற்றர் நீளமும் கொண்டவை. 150 மில்லி மீற்றர் - 200 மில்லி மீற்றர் வரை தடிப்பானவை. ஒரு சதுர அடி கட்டியை வைத்துக் கட்டி அமைப்பதற்கு 180 ரூபா செலவாகும்.



ஐ.சி.சியின் கொங்கிறீட் கட்டிகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் அழகிகள்.

200 மில்லி மீற்றர் கட்டியாயின் 192 ரூபா செலவாகும்.

கட்டடத்தின் உட்புற வேலைகளை விரைவில் செய்வதற்கு இவை உதவுகின்றன. சாரக்கட்டுகள், முண்டுகள் இல்லாததே இதற்குக்காரணம். தேவைகளுக்கேற்றபடி கட்டிகளை நீளவாட்டாக வெட்டிப் பயன்படுத்த முடியும்.

இக் குழிவுக் கட்டிகள் 40 தரமுடைய சீரோ-சிலம்ப் கொங்கிறீட் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இது இலங்கையில் கிடைப்பது அரிது. இவற்றை உற்பத்தி செய்வதில் பெருமளவு ஆய்வு நடத்தப்படுகிறது. கட்டிகளும் அவற்றின் பலத்தை உறுதி செய்வதற்காக பரீட்சிக்கப்படுகின்றன.

கட்டிகளை நிறுத்தி பொருத்தியும் அவற்றின் மீது நிறப்பூச்சுக்கள் செய்ய முடியும்.உட்குழிவுகள் நீர்க் குழாய்களையோ, வேறு நிர்மாணிப்புக்களையோ செய்வதற்கு இடமளிக்கின்றன.

இதன் மூலம் நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்த கொங்கிறீட் கற்களை கைவிட்டு, பொறியியலாளர்கள், சிற்பிகள், நிர்மாணிப்பில் ஈடுபடும் ஒப்பந்தகாரர் ஆகியோர் பயனடையும் விதத்தில் முன்னேறிய தொழில் நுட்பத்துடன் நாம் இதனை மீண்டும் அறிமுகம் செய்துள்ளோம் என்று நாகொடவிதான மேலும் தெரிவித்தார். உட்குழிவுகளைத் தயாரிக்கும் இயந்திரத்தை 25 மில்லியன் ரூபா செலவில் நிறுவனம் அமைத்திருக்கிறது.

சர்வதேச நிர்மாணிப்புக் கூட்டமைப்பு (ICC) 1980 இல் தொடங்கப்பட்டதுடன் பல விருதுகளைப் பெற்றுள்ளது. 2002 இன் வீதி புனர் நிர்மாண செயற்றிட்டத்தினை திறம்பட நிறைவேற்றியதற்கென IFAWPCA இன் தங்கப்பதக்கத்தை வென்றிருந்தது.

நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது. அத்துடன், ஜா-எலவிலுள்ள 1.2 மில்லியன் ரூபா செலவிலான நிவாசிபுர வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாண சிற்பியாகவும் உரிமையாளராகவும் இருக்கிறது. இத்திட்டம் 114 ஏக்கரில் அமைந்துள்ளதுடன் 1200 வீடுகளைக் கொண்டுள்ளது.

# யுத்த நிறுத்த மீறல்கள் குறித்து ஆராய ஈ.பி.டி.பியின் விசேட குழு

## வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறதாம்

கொழும்பு,ஜூலை31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை வடக்கு - கிழக்கில் புலிகள் மீறி உள்ளார்களா என்பது பற்றி ஆராய்வதற்காக வெளிநாட்டில் இருந்து ஈ.பி.டி.பி அமைப்பின் விசேட குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

இணையத்தளம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

வருகை தந்துள்ளகுழு தற்போது கொழும்பில் தங்கியுள்ளது. விரைவில அது வடக்குக்கு விஜயம் செய்ய உள்ளது.

வடக்கு - கிழக்கில் கொலைகள், கடத்தல்கள், பணம் பறிப்புக்கள் என்பன தொடர்பாக இந்தக் குழுவினர் விசேட கவனம் செலுத்துவர்.

ஈ.பி.டி.பியின் அனுபவம் வாய்ந்த மூத்த உறுப்பினர்களைக் கொண்டு இந்தக் குழுவின் பிரதிநிதிகள் லண்டன், நோர்வே, சுவீடன், இந்தியா ஆகியநாடுகளில் உள்ள அமைப்பின் கிளைகளில் இருந்து வந்துள்ளனர்.

இவர்களது ஆய்வறிக்கை சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல வேறு மனிதநேய அமைப்புக்களுக்கும் வழங்கப்படும் என்று அந்த இணையத் தளம் தெரிவித்துள்ளது. (ம)

# தாய்லாந்துப் பிரதமர் இலங்கைக்கு விஜயம்

கொழும்பு,ஜூலை31

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் ஷினாவாத்ரா எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகைதரவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

இரு நாள்கள் கொழும்பில் தங்கியிருக்கும் தாய்லாந்துப் பிரதமர் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்தும் ஆராய்வார் என்று கூறப்படுகின்றது.

இலங்கையின் புனரமைப்புப் பணிகளுக்காக 3கோடி 40 லட்சம் பாத்களை (தாய்லாந்துப் பணம்) வழங்குவதாக உறுதி கூறியுள்ள தாய்லாந்து, கண்ணிவெடியகற்றும் பிரிவுகளுக்கான பயிற்சிகளை இலவசமாக வழங்குவதற்கும் முன்வந்துள்ளது.

தாய்லாந்துப் பிரதமரின் விஜயத்தின் போது விவசாயம், ரப்பர் உற்பத்தி, சுதந்திர வர்த்தகம் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# பிரதமர், சில அமைச்சர்கள் மீது ஜனாதிபதி செயலகம் பாய்ச்சல்

கொழும்பு,ஜூலை31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகள் தொடர்பான உண்மையான விவரங்களை ஜனாதிபதிக்கு விளக்க பிரதமரும் முக்கிய அமைச்சர்கள் சிலரும் தவறிவிட்டதாக ஜனாதிபதி செயலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரசு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவுக்கும் ஜனாதிபதிக்கு வழங்கிய வரைவுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள் மிகவும் பாரதூரமானவை என்றும் ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய சிக்கல்கள் குறித்து பிரதமர் அலுவலகம் ஜனாதிபதிக்கு தவறான அறிக்கைகளை அனுப்பிய நோக்கம் என்ன என்றும் அது கேள்வி எழுப்பியுள்ளது. (ம)

# புலிகளின் திருத்தத்துக்கு கதிர்காமர் வரவேற்பு

கொழும்பு,ஜூலை31

அரசு விடுதலைப் புலிகளிடம் வழங்கியுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவு தொடர்பாகத் தாம் சில திருத்தங்களை முன்வைப்போம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துக்கு, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வரவேற்றுள்ளார்.

தற்போது வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதில் உள்ள இழுபறிகள் இதன் மூலம் அகற்றப்பட்டு இனப்பிரச் சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வழிபிறக்கும். புலிகள் முன்வைக்கும் திருத்தங்களை அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைத்து ஆராய்வதன் மூலம் இது சாத்தியமாகும் என்றும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## சாயி சிந்தனை

### நீ நல்லவனாக வேண்டும்



நீ சமூகத்தில் ஓர் அங்கத்தினன். சமூகத்தில் அங்கத்தினர்கள் நல்லமுறையில் இயங்கினால்தான் சமூகம் நற்பெயர் பெறும். சமுதாயம் நல்லபடியாக இருக்கவேண்டுமானால் தனிப்பட்ட மனிதன் நல்லவனாக வேண்டும். சமூகம தனிமனிதனைச் சார்ந்தே இருக்கிறது. தனிமனிதன் நல்லவனாக இருக்கும் பொழுது சமூகம் நல்லபடியாக இருக்கும். சமூகம் மாறவேண்டுமானால் நீ போய் சொற்பொழிவாற்றுவதில் பயனில்லை. முதலில் நீ முன்னுதாரணமாக நடந்துகொள். தனிமனிதன் மாறும் போதுதான் சமூகம் தானாக மாறுகிறது. அவன் நல்லவனாகும் போது சமூகம் நல்லதாகிறது. நீ நல்லபடியாக மாறாமல் சமூகத்துக்கு நன்மை ஏதும் செய்ய முடியாது. நீ நல்லவனாக மாறு!. உன இதயத்தை பவித்திரமாக மாற்றிக்கொள். அப்போது சமூகத்தைப் பவித்திரமாக மாற்ற முயற்சி செய்யும் அருகதை உனக்கு உண்டாகிறது.

தர்மத்தை நிலைநாட்ட முதலில் நீ நேரான பாதையில் நடக்க வேண்டும். அப்போதுதான் தர்மத்தை நிலைநாட்ட, போஷிக்க, பாதுகாக்க உனக்கு உரிமை கிடைக்கிறது. அரிச்சந்திரன் தர்மம் செய்தான், தானம் செய்தான் அவனுக்கு அவற்றைச் செய்ய எல்லா அருகதையும் இருந்தது. எல்லாவற்றையும் தியாகம் செய்தான். கடைசியில் தன் மனைவி, மகனையும் கூட தியாகம் செய்தான். மயானத்தில் வேலை பார்த்தான்; எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தான். இருப்பினும், நிலை மாறவில்லை. சொன்ன வாக்கைக் காப்பாற்றினான். தன் வாக்குறுதியை மீறுவதைப் போன்ற பாவம் வேறெதுவும் உண்டா? இது தர்மமல்ல! தர்மத்தை நிலைநாட்ட திடமான எண்ணம் கொண்டவனே தலை சிறந்தவன்.

*(ஆதாரம்:சனாதனசாரதி)*

– கொழும்பு விமானப் பயணிகளுக்கான
முக்கிய அறிவித்தல்

## செரண்டிப் விமான சேவை

கஸ்ட் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 5ஆம் திகதி வரையான சகல
னப் பயணங்களும் மாற்றப்பட்டுள்ளதால் தயவுசெய்து எங்கள் விமான
ட்டுகள் பெற்ற பயணிகள் உடன் தொடர்புகொள்ளவும்.

.: 021- 2226144.

ஹெப்பி இம்பெக்ஸ்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

913) (31-16-17)



## WALK-IN INTERVIEW

We are looking for a lecturer in Information Technology to fill an immediate vacancy.

1. The ideal candidate should be a B.Sc. degree holder in Computer Science, from any university in Srilanka or abroad or any other professional bodies.
2. Fluency in English and corresponding ability in this language is a must.

The person selected could expect a salary ranging from Rs. 15,000.00 to Rs. 20,000.00 per month and other fringe benefits depending on their qualification and experience.

ersted persons should call over at this office from 00 a.m. to 1.00 p.m. on Sunday 3rd August 2003.

**DIRECTOR**
**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
**100, CLOCK TOWER ROAD, JAFFNA.**


## தலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1942 | 2002 |
| 02 | 08 |
| 06 | 11 |

## வேலன் பொன்னன்

**(31.07.2003 - வியாழக்கிழமை)**

அன்பின் திருவுருவே! எமது அப்பாவே!
நீங்கள் மறைந்து ஒருவருடம் பூர்த்தியாகிவிட்டது.
எமது அப்பா நீங்கள் எம்மை இருகண்கள் போல்
பேணிக்காத்தீர்கள்! நாம் கல்வி கற்று உயர்வு பெற
நெற்றிவியர்வை சிந்தி நித்தம் உழைத்தீர்கள்.
உமது உழைப்பால் நாம் உயர்வு பெற்றோம்.
எமது வாழ்வுக்காக உழைத்து மறைந்த விளக்கின் ஆத்மாசாந்தி
யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மனைவி (பொ.சுந்தரி)
பிள்ளைகள் :
ஜெயராசா லலிதா, ரவிச்சந்திரன் சுதாமதி
(யாழ். கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
பொன்னன் லோகவதி
(யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்)
பேரப்பிள்ளைகள் :
லோஜிதன், கிரிஷாந்தி, சாமந்தி, பிரதாபன்.

*காட்டுப்புலம்,*
*கரவெட்டி கிழக்கு.*
(சி-29215) (31-16-17)

## முதலாம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 26 | 31 |
| 10 | 07 |
| 1949 | 2002 |

## திருமதி சேவியர் மேரிவிஸிவிரிடா

(மல்லிகா)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லையம்மா எம் துயரம்

அன்னாரின் ஆத்மசாந்தித் திருப்பலிப் பூசை இன்று (31.07.2003) காலை
மணியளவில் புனித நீக்கிலஸ் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

*ந்துறை வடக்கு.*
(20910) (31-16-17)

பிரிவால் துயருறும்:
கணவர், சகோதரர்கள்.

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நாளை ஆடிப்பூரத்தையொட்டி காலை 9 மணிக்கு விசேட பூசை, அபிஷேகம் என்பன நடைபெறும். (ஓ-10-17)

★ ★ ★

கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவத்தையொட்டி காலை 6 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து திருமஞ்சள் நீராட்டலும், ருதுசாந்தியும் இடம்பெறும். (ஓ-10)

★ ★ ★

கந்தர்மடம், அரசடி வீதி செல்வநாக பூஷணி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழாவில் நாளை காலை 10 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசைகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-10)

★ ★ ★

கோப்பாய் மத்தி முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்த உற்சவம் நாளையும் இடம்பெறும். (ஓ-10-72)

★ ★ ★

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஓ-10)

★ ★ ★

கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் ஆலய தேர் உற்சவம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும். (ஓ-10-180)

★ ★ ★

இணுவில் காரைக்கால் சிவன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஓ-10-72)

★ ★ ★

கைதடி,வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பரத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். உற்சவ நாள்களில் தினமும் இரவு 7 மணிக்கு சமய சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-9)

## தவறிவிட்டது

**C.N0-C50-0925256,**
**E.No - C50 - E. 0882050**
இலக்கமுடைய லான்சர் சுப்பர்கப் ஹொண்டா மோட்டார் சைக்கிளின் சிட்டையும் (றிசிற்) அதற்குரிய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கதிர் வடிவேல், இல 447, இராமலிங்கம் வீதி, நல்லூர் **(TP-077-7293441)** எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.
(20912)


**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜீன், கிரண், கவுண்டமணி நடித்த
**பரசுராம்**
தினசரி காட்சி : 11.00, 2.30, 7.10 (பி.நே.)
இன்று மட்டும் இரவு 7 மணிக்கு
**The Art of War**
(C/28707) (31-16-17)

**நிறைஞ்சனால்**
விக்ரம், பிரியங்கா நடித்த
**கர்தல் சடுகுடு**
தினசரி காட்சி: 11.00, 1.45, 6.00 (பி.நே.)
**THE MUMMY**
நாளை முதல்
முரளி, தேவயானி நடித்த **காதலுடன்**
(31-16-17)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி**
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(31-16-17)

**லிபேட்டி** அச்சுவேலி
சரத்குமார் தேவயானி விவேக் நடித்த
**தென்காசிப்பட்டணம்**

தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
தினசரி காலை 11.00 மணிக்கு **CROUCHING TIGER HIDDEN DRAGON**
(C/29160) (31-16-17) சிறந்த கராட்டிச்சித்திரம்.


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 | 17 |
| 11 | 06 |
| 1926 | 2003 |

### அமரர் நாகேந்திரம் சுப்பிரமணியம் (சாமிஅப்பு)

எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே!
காலமெல்லாம் நெஞ்சுருகும் ஈரவிழிகளுடன்
அஞ்சலித்து உமக்காய் மேலவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*முதலாம் குறுக்குத்தெரு,*
*கொழும்புத்துறை.*
(20905) (32-16-17-31)

# மரண அறிவித்தல்கள்

## விஜயரட்ணம் குணரட்ணம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் குணரட்ணம் நேற்று (30.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - கனகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - ரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும் மகாலட்சுமியின் கணவரும் தர்ஷினி (ஜேர்மனி), ஜெயகுனா (கனடா) ஆகியோரின் தந்தையும் அமரர்களான தவராஜசிங்கம், இரத்தினகாந்தி மற்றும் நாகரத்தினம் (இங்கிலாந்து), பூவா, பாலசிங்கம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் நாகேஸ்வரி அம்மாள், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் சந்திரகுமார், ராணியின் மாமனும் சரண்யாவின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2003) வியாழக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி அம்மன் கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(20909) (31-16-17)

தகவல் :
மனைவி.

## சிவக்கொழுந்து நடராசா

(யாழ். கச்சேரி லிகிதர்)

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, சொர்ணவடலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நடராசா (யாழ் கச்சேரி லிகிதர்) அவர்கள் 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - அழகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் கதிர்காமத்தம்பி, இராசரட்ணம், காலஞ்சென்றவர்களான ஜீவரெட்ணம், இராஜலட்சுமி ஆகியோரின் சகோதரரும் பாலேந்திரா, சுகுனேந்திரா, செல்வேந்திரா, யோகேந்திரா, மஞ்சுளா, அரதரணி ஆகியோரின் தந்தையும் சசிலா, வாசுகி, சுஜிர்தா, லட்சுமி, ரவிக்குமார், குருபரன், சத்தியமூர்த்தி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் வைத்திலிங்கம் பத்தர், இரட்ணதுரையின் மைத்துனரும் சோபிகா, பிரின்சி[illegible], [illegible]திரன், ஆலொலி, ஜெனகன், அஸ்விந், விநோத், துஸ்யந்தன், சு[illegible] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2003) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*சொர்ணவடலி.*
(20915) (32-16-17-31)

தகவல்:
குடும்பத்தினர்.

## கில்லறி ஜெயக்குமார் யோசவ்

இல. 1/14, புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் யோசவ் நேற்று (30.07.2003) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதன் யோசவ் (இளைப்பாறிய ஆசிரியர்) - மரியம்மா (அருள்மணி) ஆகியோரின் அன்பு மகனும் எமிலியானஸ், அன்ரன், ராஜன், காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் யூட் ஜோண்சன், டயஸ் றெஜினோல்ட் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோபனா, பொபித்தா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கத்திருப்பலி கொய்யாத்தோட்டம், கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இன்று (31.07.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் (பி.நே.) இடம்பெற்றபின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
*இல. 1/14, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மரியம்மா யோசவ் (தாய்)
(20914)(31-16-17)

## செல்வி சிவமணி அருளம்பலம்

(இளைப்பாறிய ஆசிரியை. வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் வசித்துவந்தவருமான செல்வி சிவமணி அருளம்பலம் 29.07.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் திருமதி சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, திருமதி சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், அநவரதவிநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.07.2003) புதன்கிழமை 23, வண்டவாட் பிளேஸ், தெகிவளையில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சக்தி' தொலைத் தொடர்பு சேவை,*
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
திருமதி சிவபாக்கியம்
சிவஞானசுந்தரம்
(சகோதரி).

(சி-29217)(31-16-17)

# முஸ்லிம்களுக்கு தனி அலகு வழங்குவதில் ஜே.வி.பிக்கு எந்தவித ஆட்சேபமும் இல்லையாம்!

கொழும்பு,ஜூலை31

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையைத் தாம் எதிர்க்கவில்லை என்றும் -

புலிகளின் பிரிவினை வாதத்திற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைளை தாம் எதிர்ப்பதாகவும் - ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தம்மைச் சந்தித்த தேசிய ஐக்கிய முன்னணியினரிடமே ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இந்தச்சந்திப்பு பற்றி தேசிய ஐக்கிய முன்னணி பிரதித்தலைவரும் எம்.பியுமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் மேற்கொள்ளும் பேச்சுக்களில் அவை இணக்கப்பாட்டுக்கு வருமுன்னர் வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பாக ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவே கடந்த வெள்ளிக்கிழமை ஜே.வி.பியுடன் சந்திப்பு எம்மால் மேற்கொள்ளப்பட்டது.

நாம் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கிழக்கு மாகாணத்தில் தனியானதொரு கரையோர மாவட்டம் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும் என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்க்கவில்லை.

ஆனால், ஜே.வி.பியினர் கிழக்கில் முஸ்லிம்களுக்கென கரையோர மாவட்டம் நிர்ணயிக்கப்படுவதை விரும்பவில்லை. இது விடயத்தில் அவர்களது நிலைப்பாட்டை தெரிந்துகொள்வதற்காகவே ஜே.வி.பியினருடன் பேச்சு மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து எமது கட்சி மேலும் கூடி ஆராயவுள்ளது - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## மரண தண்டனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்தார்கள் என்று இராணுவப் பொலீஸை சேர்ந்த ஐவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் முடிவில் கொழும்பு மேல்நீதிமன்றம் எதிரிகள் ஐவருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மகளைத் தேடிச் சென்ற கிருஷாந்தியின் தாயாரான ராசம்மா குமாரசுவாமி, மகன் குமாரசுவாமி பிரணவன் மற்றும் அயலவரான சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரும் கொலை செய்யப்பட்டனர்.

ராஜபக்ஷ தேவகே சோமரத்ன, குணசேகரகே பிரதீப் பிரியதர்சன, தசநாயக்க முதியான் சலாகே ஜயதிலக்க, டி.வி.இந்திரஜித்குமார, அம்பவத்தகே சுரஞ்சி பிரியசாந்த பெரேரா ஆகியோரே குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளாவர்.

இவர்களுக்கெதிராக 18 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக ட்ரயல் அட்பார் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் முடிவில் ஐவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பினை எதிர்த்து எதிரிகள் அனைவரும் உயர்நீதிமன்றத்தில மேன்முறையீடு செய்தனர்.

நேற்று உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தின் போது நவம்பர் மாதம் 4ஆம் திகதியும், 5ஆம் திகதியும் 5 நீதியரசர்கள் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை செய்வது என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் இன்று வியாழன் பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின யாழ். மாவட்ட அரசியல்துறை கேட்டுள்ளது. (ஐ)

## பாகிஸ்தான் அமைச்சர் இலங்கை வருகை

பாகிஸ்தானின் உள்துறை மற்றும் போதைவஸ்து தடுப்புத்துறைக்கான அமைச்சர் செய்யது பைசால் இன்று இலங்கை வருகிறார்.

இரண்டு நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வரும் இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது பிராந்திய தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் என்பன தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்படவுள்ளன.

## சிறுவர் மெய்வன்மைப் போட்டி

தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தேவாலய முன்றலில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (ஐ)

## கிராமிய அபிவிருத்தி அலுவலர் இடமாற்றம்

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராமிய அபிவிருத்தி அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ.பராசசேகரம் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கும், பளை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சி.உமாபாரதி தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய திருமதி ஜெயராஜா பளை பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ-117)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்

பிற்பகல் இக்கலந்துரையாடல் ந... பெற்றது.

சகல அரச திணைக்களங்... கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆ... வற்றின் தலைவர்கள், மாநகர... நகர சபைகளின் உயர் அதிகா... இக்கலந்துரையாடலில் பங்குபற்றி... யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை அரச அதிபரின் பி... நிதியாகக் கலந்துகொண்டார்.

'ஒன்றிணைந்த அபிவிருத்தியி... எண்ணக்கரு' பற்றி அரசசார்பற்... நிறுவனங்களின் இணையப்பிரதிநி... அங்கு உரையாற்றினார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நிலவளம், நீர்வளம், கல்வி... வைத்தியசாலைகள் போன்றவற்றில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைக... தொடர்பாக துறைசார் தலைவர்... கருத்துக்களைப் பகிர்ந்து கொ... டார்கள்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திப் ... களை முன்னெடுக்கும்போது ம... ளின் தேவைகளைக் கருத்திற்கொ... ஒருங்கிணைந்த செயற்பாடு அ... யம் என்று அங்கு வலியுறுத்... டது.

## கண்காணிப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 28ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் புலிகளின் செயலகத்தின் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல், ஒரு பேர் நிறுத்த மீறல் சம்பவமாகும். இச்சம்பவத்தின் போது எமது போராளியான குட்டி என்பவர் காயமடைந்துள்ளார். இந்த நடவடிக்கை ஒரு கொலை முயற்சியாகும். அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் மீது இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்துவதை உடன் நிறுத்துவதற்கான நடவடிககைகளை கண்காணிப்புக் குழு மேற்கொள்ளவேண்டும்.

வவுனியாப் பகுதியில் ந... வந்த சுமுகமான சூழலைக் ... பும் நோக்குடன் மேற்கொள்ளப்ப... இந்த நடவடிக்கை விடுதலைப் ... களை சீண்டும் நடவடிக்கையாக உள்ளது. மேலும், இச்சம்ப... தொடர்பாக எமது மிகுந்த கவ... னத்தைத் தெரிவித்துக்கொள்... டன் இனிவரும் காலங்களில் ... போன்ற சம்பவங்களைத் தவிர்... உரியவர்களுடன் தொடர்புகொ... ஏற்ற நடவடிக்கையை துரிதமாக ... கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோ... இது போன்ற நடவடிக்கைகள் அ... திக்கு பங்கம் ஏற்படுத்தும் என்... யும் தெரிவிக்கின்றோம் - என்... ளது.

## பட்டதாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். சுமார் 400 பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று பட்டதாரிகள் ஒன்றியத்தின் பொருளாளரான வடிவேல் கண்ணன் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் க.ஜெகதீஸ்வரன் தகவல் தருகையில், மட்டக்களப்பு மவட்டத்தில் 1998 முதல் 2002ஆம் ஆண்டு வரை 600 பட்டதாரிகள் உள்ளனர். தென்பகுதி உட்பட ஏனைய மாவட்டங்களில் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், இம்மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படவில்லை. வேலை வழஙகக் கோரியே இப் பேராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். வேலை வழங்கப்படாது போனால் போராட்டம் நீடிக்கும் என்று கூறினார்.

அந்த இடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ண பிள்ளை குறைகளைக் கேட்டறிந்தார். பின்னர் உறுதிமொழி வழங்கினார். ஆயினும், பட்டதாரிகள் அந்த உ... மொழியை ஏற்றுக்கொள்ளவில்ல...

போராட்டம் காரணமாக கச்சே... ஊழியர்கள் உட்பட பொதுமக்க... வீதியில் நிற்க வேண்டியதாயிற்...

இதேவேளை, கச்சேரியின் மு... பக்கமாகவுள்ள நீதி மன்றங்களி... அலுவல்கள் பாதிக்கப்படவில்லை.

போராட்டத்தில் ஈடுபட்டிருக்கு... பட்டதாரிகள் மகஜர் ஒன்றை பிரத... மர், வடக்கு - கிழக்கு ஆளுநர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பியுள்ளனர். (ஐ)

## வீட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைப்பில் விசேடமானதாகும். கட்டணங்கள் அறவிட தற்பொழுது கடைப்பிடிக்கப்படும் நான்கு பிரிவுகள் மூன்று பிரிவுகளாகக் குறைக்கப்படும்.

இதன்படி, கூறுகள் 201இலிருந்து கூறுகள் 1,000 வரை 3 ரூபா வீதப்படியும், கூறுகள் 1,001 இலிருந்து கூறுகள் 3,000 வரை 2ரூபா 75 சதப்படியும், 3,001இற்கு மேற்பட்ட கூறுகளுக்கு 2ரூபா 50 சதப்படியும் கட்டணம் அறவிடப்படும்.

புதிய தொலைபேசித் தொடர்புகளை வழங்க தற்போது அறவிடப்படும் கட்டணம் 15,300 ரூபாவிலிருந்து 19,750 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாட வேண்டும். தீர ஆராய்ந்த பின்னரே இறுதித் தீர்மானத்திற்கு வரவேண்டும் என்பது அரசின் கருத்தாக இருந்தது. ஜனாதிபதி இந்தக் கருத்துடன் உடன்பட்டிருக்கிறார். அரசின் யோசனைகளைத் தமது சட்ட வல்லுநர்களைக் கொண்டு புலிகளும் ஆராய்ந்து வருகின்றனர்.

இப்படி அந்த வானொலி தெரிவித்தது. (ஐ-8)

SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும்பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited நிறுவனத்தினரும், SCS நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு சகல கணனிகளையும் நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Various Mother Board Handling
♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management
♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...
Duration 4 -5 Months

பாடநெறியின் முடிவில் கம்பியூட்டர் ஹார்ட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP

♦ Fundamentals of Information Technology ♦ Outlook ♦ Word ♦ Excel ♦MS Money
♦MS Project ♦Access ♦ PowerPoint ♦ Binder ♦ MS Schdule ♦ Internet, E-mail
Duration 6 - 7 Months

DIPLOMA IN COMPUTER PROGRAMMING

♦ Information Technology ♦ SAD ♦ MIS, DBMS, RDBMS, ORDBMS
♦ Visual C++(System, Bios, Memory, Disk, Network Programming) ♦ Visual Basic (Com & Dcom Level)
♦ Netware administration programming System Diagnostic Programming ♦ protocol Builds - up
♦ Visual Fox Pro ♦ Oracle ♦Java ♦ Internet, Interfacing programming
Duration 12 Months

- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்.
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்
- Online Classes

பயிற்சி ஆரம்பம் 02.08.2003

Soft View Computer College
Jaffna, Sri Lanka
www.arammenporulagam.com arammenporulagam@eth.net

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 222-5170

Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P : +91-44-4891286

Number 79, Jalam Gambus 11, Taman Desawan, 41200 Klang, Malasiya. T.P : +60-3-33234650

சான்றிதழ்களை மட்டுமே அடுக்கி வைத்துக்கொண்டு அடுத்து என்ன செய்வது?
சான்றிதழ்களை மட்டுமல்ல, கணனி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களிலோ அல்லது சுயமாகவோ
கணனி வேலைவாய்ப்பினை உருவாக்கிட உங்கள் கணனி நண்பன் SCC

## மரண அறிவித்தல்

### திருமதி வைத்திலிங்கம் இராசம்மா

### (தேபோறாள்)

எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபையைச் சேர்ந்த வைத்திலிங்கம் இராசம்மா (தேபோறாள்) நேற்று (30.07.2003) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் சுரேஸ்குமாரன் (தபால் ஊழியர், சுன்னாகம்), சுதர்சினி (ஆசிரியர், அமி. த.க. பாடசாலை, சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (31.07.2003) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை, சுன்னாகம். (20914) (31-14-16) தகவல் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எஸ்~லோன் குழாய்கள் வாங்கும்போது S-Lon பெயர் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்குங்கள்.



## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் தரமுயர்ந்த எஸ்- லோன் பீ.வி.சி. குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் என்பன சகல அளவுகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

நீர்க்குழாய்கள், பொருத்துக்கள், பீலிகள் வாங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோன் என்ற பெயர் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்கத் தவறாதீர்கள்.

S-Lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் யாழ்ப்பாண விநியோக நிலையம்
287 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2225950

# பெயர் மாற்றம்

கூவில், புலோலி தெற்கு என்னும் முகவரியில் வசிக்கும் **முத்து சின்னப்பிள்ளை** ஆகிய நான் **30.07.2003** முதல் எனது பெயரை **முத்து மதி** என சட்ட வரம்புக்கமைய மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

முத்து மதி,
கூவில், புலோலி தெற்கு,
பருத்தித்துறை.

(20879)(27-24-19-12)

# வருமானம் குறைந்தோருக்கான புதிய வீடமைப்புக் கடன்

தெல்லிப்பழை,ஜூலை31

குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக்கடன் திட்டமொன்று ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறையைச் சார்ந்தோர் வீடொன்றை அமைத்துக் கொள்வதற்குக் குறைந்த வட்டியுடனான கடன் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

இதனடிப்படையில் 10.5 சதவீத வட்டியில் சுமார் 5லட்சம் ரூபா வரை கடனாகப் பெறமுடியும். இதனை 15 வருட காலங்களில் திருப்பிச் செலுத்த அவகாசமளிக்கப்படும். கடன் பெறுபவரின் மீளச்செலுத்தும் வலுவின் அடிப்படையில் இக்கடனுக்கான பொறுப்புகளை வங்கி ஏற்கவுள்ளது.(ஒ-150)

# பாடசாலை கட்டடத்தொகுதி திறந்து வைப்பு

சாவகச்சேரி,ஜூலை31

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் 9லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் இ. இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் வெளிக்களக் குழுத்தலைவர் விலுப்பி கட்டடத் தொகுதியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்கள், பாடசாலை சமூகத்தின் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-10-31)

# மயானத்தை புனரமைக்க கோரிக்கை

கைதடி,ஜூலை31

கைதடியிலுள்ள ஊரியான் இந்து மயானத்தை மக்கள் பாவனைக்கு உகந்ததாக புனரமைத்துத் தரும்படி இப்பகுதி மக்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது.

இம்மயானம் கைதடி சைவச்சிறுவர் இல்லத்திற்கு பின்புறமாக அமைந்துள்ளது. இங்கு சடலங்களை வைத்து எரியூட்டக்கூடியவாறு மேடையோ, தகனக்கிரியைகளை மேற்கொள்ள மண்டப வசதியோ இல்லை.

மழை காலங்களிலே இம்மயானத்தை மூடியநிலையிலே வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் மழை காலங்களிலே இம்மயானத்தைப் பயன்படுத்துவதில பொதுமக்கள் பல இடர்களை அனுபவித்து வருகின்றார்கள்.

எனவே, இம்மயானத்தை மக்கள் பாவனைக்குகந்ததாக அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்களால் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மயானத்தை கைதடி மேற்கு, கைதடிதெற்கு, நாவற்குழி செல்வா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

(ம-75)


தென்மராட்சியில் RASAMS

இராசம்ஸ் மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம்

❊ மக்களின் வசிப்பிடங்கள் ❊ தொழிற்சாலைகள்
❊ பொது ஸ்தாபனங்கள் ❊ அரச அலுவலகங்கள் ❊ ஆலயங்கள் என்பவற்றுக்கான

**மின் இணைப்புக்கேற்ற மின் உபகரணங்கள்**

- ✦ அலங்கார மின் விளக்குகள்
- ✦ மின் விசிறிகள் FAN
- ✦ மின் சீராக்கிகள் ESTABILISOR
- ✦ மின்சார தண்ணீர் பம்புகள் ELECTRIC PUMP
- ✦ அன்ரனா வகைகள் ANTANA VHF/ UHF
- ✦ தொலைபேசிகள் TELEPHONES
- ✦ பற்றறி வகைகள் EXIDE BATTARIES
- ✦ பி.வி.சி. குழாய்கள் P.V.C. PIPES




*முதலியவற்றை ஒரே இடத்தில் நிதான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*

☞ ஒரு முனை **SINGLE PHASE,** மும்முனை **THREE PHASE** இணைப்புகள் யாவும் - அரச நிறுவனங்களில் கடமையாற்றிய தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்டு மின்னியல் சட்ட திட்டத்துக்கு அமைவாகச் செய்துகொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இராசம்ஸ் RASAMS
மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்
135, கண்டி வீதி, சாவகச்சேரி.
☎ 021- 222 3017
021 - 222 6041

(சி-29197)(24-19-12)


உ



# வண்.வடமேற்கு - ஆனைக்கோட்டை

# ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய

# தேர்த்திருவிழா சிறப்புமலர் 31.07.2003

## பிரதம குருக்களின் ஆசி உரை



சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் எனப்படுகின்ற பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும் மஹோற்சவமே உற்சவங்களில் சிறந்த பிரமோற்சவமாகும். நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படுகின்ற குறைகளைத் தீர்ப்பதற்கே பிராயச்சித்தமாக இந்த மஹோற்சவத்தை நடத்துகின்றோம். ஆகவே, வீரமா பிடாரி அம்பாளின் திருவருளோடு நித்திய, நைமித்திய கிரியைகள் செய்வதற்கும் பிரதம குருவாக இருப்பதற்கும் அம்பாளின் திருவருள் கிடைத்துள்ளது. ஆகவே, ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற மஹோற்சவத்தில் பல அடியார்கள் கலந்து கொள்கிறார்கள். இன்று (31.07.2003) வியாழக்கிழமை நடைபெறுகின்ற தேர் உற்சவத்தின்போது பல அடியார்கள் வருகைதந்து அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும். ஆகவே, இவ்வாலயம் பல திருப்பணி வேலைகள் நடைபெற்று சிறப்புற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து மற்றும் தேர் உற்சவத்தின்போது உபயகாரர்கள் தர்மகர்த்தா சபையினர், இந்து இளைஞர் மன்ற இளைஞர்கள், அடியார்கள் மற்றும் சமயப் பெரியோர்கள் எல்லோரும் பிடாரி அம்பாளின் திருவருளோடு சாந்தி, சமாதானம் பெற்று சகல செல்வங்களும் கிடைக்கப்பெற்று நீடூழி காலம் வாழ வேண்டி எனது ஆசியை உரித்தாக்குகிறேன்.

பிரதமகுரு:
**சிவப்பிரம்மஸ்ரீ இரங்க - வரதராஜக்குருக்கள்**
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் தேவஸ்தானம்.

(20889) (24-19-12)


**கரன் வோச் அன் றேடியோ**
இல.91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ்ரன் மல்ரி சென்ரர்**
இல.48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் எலக்ரோனிக்ஸ்**
நாச்சிமார்கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**சந்திரா ஹாட்வெயர்ஸ்**
பிடாரிகோயிலடி, ஆனைக்கோட்டை,
உரிமையாளர்: நல்லதம்பி கந்தையா,
கந்தையா ராஜ்பிரபா

**தயாழினி வீடியோ சென்ரர்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**சுந்தர் களஞ்சியம்**
கேணியடி,
கொக்குவில் மேற்கு.

**கிருஷ்ணா வீடியோ, ஓடியோ அன் றெக்கோடிங் சென்ரர்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்**
கொக்குவில் மேற்கு.

**பிடாரி களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி, கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**கீத்தா ஹாட்வெயார்ஸ்**
ஆறுகால்மடம்,
மானிப்பாய் வீதி.

**கணேசா களஞ்சியம்**
70/1, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

# சிரமங்களின் மத்தியில் இயங்கிவரும் செம்மணி உப்பு உற்பத்தி நிலையம்!

இலங்கையின் பெரும்பாலான இடங்களுக்கு வடபகுதியிலிருந்து சிமெந்து, இரசாயனப் பொருள்கள், உப்பு போன்றவை அனுப்பப்பட்ட காலம் ஒன்று இருந்தது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் போன்றவற்றின் உற்பத்திகள் இலங்கையின் தேவைகளை கணிசமான அளவு பூர்த்தி செய்தன. ஆனால், யுத்தத்தினால் இத்தொழிற்சாலைகள் அழிந்துபோயின.

அன்றாட உணவுக்கு அத்தியாவசியமான உப்பைக்கூட புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டையிலிருந்தே


உற்பத்தியான உப்பு சேகரிக்கப்பட்டுள்ளது

வடப்குதி மக்கள் பெறவேண்டிய சூழ்நிலை உருவானது.

இந்நிலையில் தற்போதைய சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி நாவற்குழிப்பகுதியில் உள்ள செம்மணியில் உப்பு உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நாவற்குழிப் பிரதேசத்தில் - செம்மணி பரந்தவெளிப் பகுதியில - யுத்தத்துக்கு முன்னர் சிறு உப்பளம் செயற்பட்டு வந்தது. இந்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு யாழ்குடாநாட்டின் தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக அப்போது இருந்தது. ஆனால், யுத்தம் இந்த நிலைமையை மாற்றியது. யுத்தச் சூழ்நிலையால் செம்மணி உப்பளத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

அந்த உப்பளமே தற்போது மீண்டும் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

இந்த உப்பளத்தில் 2002ஆம் ஆண்டு தொடக்கம் - கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்ற - உப்புக் கூட்டுத்தாபன மேற்பார்வையாளரின் கண்காணிப்பில் மீண்டும் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

பின்னர் செம்மணி உப்புக்கூட்டுத தாபனமாக இந்த உப்பளம் செயற்பட்டு வந்தது. இது 2002ஆம் ஆண்டு தொடக்கம் ஆனையிறவு, செம்மணி மற்றும் மாந்தை(மன்னார்) ஆகிய மூன்று உப்புக் கூட்டுத்தாபனங்களையும் இணைத்து 'மாந்தை உப்பு உற்பத்தி லிமிடெட் - செம்மணி' என்ற பெயரில் இயங்கி வருகிறது.

இத்தொழிற்சாலையில் 16நிரந்தர ஊழியர்களும், 17தினக்கூலி ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். கூடுதலாக தொழிலாளர்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மேலதிகப் பணியாளர்கள் தற்காலிகமாக அமர்த்தப்படுகிறார்கள்.

செம்மணியில் உப்பு விளைவிக்கக் கூடிய இடமாக சுமார் 650ஏக்கர் அரச நிலம் காணப்படுகின்றது.

கடந்தகால யுத்த நடவடிக்கையின் பின்னர் - இப்பிரதேசத்தில் மிதிவெடிகள், வெடிக்காத நிலையில் உள்ள வெடிபொருள்கள் போன்றவை ஏராளமாகக் காணப்பட்டன. இவற்றைப் படிப்படியாக உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களே பாதுகாப்பாக மீட்டு படையினரிடம் கையளித்தனர்.

இதன் பின்னரே இங்கு ஒருபகுதியில் உப்பு விளைவிக்கும் நடவடிக்கையில் உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உப்பளத்தில் 75அடி அகலமும் 75அடி நீளமும் கொண்ட 70 பாத்திகளில் உப்பு விளைவிக்கப் படுகின்றது. உப்பு விளைச்சலுக்கு அரியாலைக் கடல் நீர் பயன்படுத்தப்படுகிறது. அரியாலைக் கடலில் இருந்து நாவற்குழிப் புகையிரதப் பாலத்தூடாக செம்மணிப் நாவற்குழிப் பகுதிக்கு வரும் கடல்நீர், வாய்க்கால்கள் மூலம் உப்பளத்துக்கு எடுத்து வரப்படுகிறது. இவ்வாறு வந்தடையும் கடல்நீர் பாரிய பாத்தி ஒன்றில் சேமிக்கப்படுகிறது. பின்னர் நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் உப்பு உற்பத்திக்கான பாத்திகளுக்கு பாய்ச்சப்பட்டு - அளவாக நிரப்பப்படுகிறது - இங்கு பாத்திகளில் நிரப்பப்படும் உப்புநீரின் காரத்தன்மையை பொறுத்து 15நாள்களில் 200அந்தர் வரையிலான உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு ஒரு வருடத்தில் ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை உற்பத்தி செய்யமுடியும்.


உப்பளப் பணியாளர்கள்

விளையும் உப்பை சேகரித்து வைப்பதற்காக 80அடி நீளமும் 26அடி அகலமும் கொண்ட 4 கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு உப்பு சேமித்து வைக்கப்படுகிறது.

யுத்தத்துக்கு முன்னர் இவ்வாறு உற்பத்தி செய்து சேகரிக்கப்பட்ட 30ஆயிரம் கிலோ உப்பு யுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டது. அந்த உப்புக் குவியல் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் சேதமாகி சாம்பல் நிறத்துடன் இங்குள்ள தள நிலத்தில் கிடப்பதை இன்றும் காணலாம்.

**செய்திக் கட்டுரை**
**நா.தங்கவேல்**

இங்கு சேகரிக்கப்பட்ட உப்பு தூய்பரவு செய்யப்பட்டு 'அயோடின்' சேர்க கப்பட்டு பொதி செய்யப்படுகிறது. பெரும்பாலும் மொத்த வியாபாரிகளே இங்கு உப்பைக் கொள்வனவு செய்கின்றனர்.

மொத்த விற்பனையின்போது ஒருகிலோ உப்பு 10ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

உப்பளத்தில் உப்பு வாங்கும் ஒருவர் ஆகக் குறைந்தது 7 பைக்கற்றுக்கள் வாங்க வேண்டும் என்பது நியதியாகும்.

இந்த உப்பளத்தில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் மேற்பார்வையாளரும், உற்பத்தியாளர்களும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். குடிதண்ணீர் வசதியோ, மலசலகூட வசதியோ, தங்குமிட கட்டட வசதிகளோ இல்லாத நிலையிலேயே அவர்கள் பணியாற்றுகின்றனர்.

நகருக்கு அண்மையில் இத்[illegible] உற்பத்தி நிறுவனம் எந்த வ[illegible] இல்லாமல் செயற்படுவது கவலைக்குரியதாகும்.

இவ்வாறு பல சிரமங்களின் மத்தியில் பணியாற்றும் உப்பள ஊழியர்களின் குறைகளை நிவர்த்தி செய்து உப்பளத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டால், 'இந்த உப்பளம் வடபகுதியின் தொழில் வளத்தை மேம்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 495 |
| திகதி | 29.07.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4083797-4098865

வெற்றி இலக்கங்கள் **18 21 35 42**



லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 3,861,900/- வெல்லப்பட்டது

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 336,317 | 10 | 3,363,170 |
| 2 இலக்கங்கள் | 30,877 | 20 | 617,540 |
| 1 இல + லக்கினம் | 30,596 | 30 | 917,880 |
| 2 இல + லக்கினம் | 2,865 | 100 | 286,500 |
| 3 இலக்கங்கள் | 824 | 500 | 412,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,861,900 | 3,861,900 |
| மொத்தம் | 401,553 | - | 10,203,990 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.10,203,990/-

தொடர் இல. 5083267க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 01ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4095404-7-09
4097506-2-24
4089249-7-43
4094438-7-21
4087853-0-72

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# வெளிநாட்டில் இருந்து வருவோரும் இம்முறை நல்லூர் இசையரங்கில்

அரியாலை,ஜூலை31

நல்லூர் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் ஆலயச்சூழலில் இடம்பெறும் இசையரங்கில் இம்முறை வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழ்இசைக் கலைஞர்களும் பங்குபற்ற உள்ளனர்.

இளங்கலைஞர் மன்றப் பொருளாளர் சுபாஸ்சண்முகநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வருடாந்தம் நல்லூர் உற்சவ காலத்தில் இந்த இசையரங்கு இடம்பெற்று வருகின்றது. உள்ளூர் இசைக்கலைஞர்கள் இதில் இசைவிருந்து வழங்கி வருகின்றனர்.

இம்முறை அவர்களுடன் சேர்ந்து, வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழ் இசைக் கலைஞர்களும் இசைவிருந்து படைக்க உள்ளனர்.(ம-17)

## நலனோம்புத் திட்டங்களுக்காக

# 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் விவரம் திரட்டு

வயது முதிர்ந்தவர்களுக்கான நலனோம்புத் திட்டங்களின் கீழ் யாழ். குடாநாட்டில் உள்ள மூன்று சுகாதார அதிகாரிகள் பிரிவில் 60வயதுக்கு மேற்பட்ட முதியோரின் விவரங்கள் மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

சுகாதார நலனோம்பு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை, தெல்லிப்பழை, மானிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவுகளில் தற்போது பரீட்சார்த்தமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

முதியவர்கள் தொடர்பான விவரம் சேகரிக்கவென 33வினாக்கள் அடங்கிய கொத்து ஒன்று ஒவ்வொரு முதியோர்களிடமும் வழங்கப்படுகிறது.

வீடு வீடாகச் சென்று சுகாதார தொண்டர்களின் உதவியுடன் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தப்பட்டது. சமூகசேவைத் திணைக்கள அதிகாரிகள், குடும்பநல சுகாதார சேவை அலுவலர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

நாட்டில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது 60வயதைக் கடந்த முதியோர்களின் உடல், உள மற்றும் சமூகப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இதன் அடிப்படையில் அவர்களுக்கான சமூக சுகாதார, பராமரிப்பு வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை முன்னிட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவர சேகரிப்பு நடவடிக்கையைச் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வீடுகளிலுள்ள முதியோர் பற்றிய விவரங்களை தத்தமது பகுதி குடும்பநல சுகாதார சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தனிப்பாவனையிலுள்ள பெண்களுக்கான ஹொண்டா மாவல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.சிவபாதம், செல்வ அகம், ஆனைக்கோட்டை. (20883)

## வாடகைக்கு

உயரப்புலம், குளப்பிட்டி வீதியில் 50 யார் தூரத்தில் 50 அடி நீள மண்டபமும், தனி அறையும் பொது ஸ்தாபன பாவனைக்கு வாடகைக்கு விடப்படும். விளம்பர இல. 1966. C/o உதயன். (20885)

## மணமகன் தேவை

பரணி நட்சத்திரம், 29 வயதுடைய, 4 செவ்வாய் 35 பாவம் உள்ள, உத்தியோகம் உடைய, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு எக்கவுண்டன், டாக்டர், எஞ்சினியர் உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது. எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்புக்களும் உண்டு. தொடர்பு: முருகன் திருமண சேவை, செ.விசயரட்டினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். மூத்தனைனார் கோயிலடி, ஆனைக்கோட்டை. T.P.222-3257 (20801)

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965 இல் பிறந்த, திருவோண நட்சத்திரம், 2ஆம் பாதம் உடைய மணமகளுக்கு, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: T.இராசரத்தினம், கரந்தன், நீர்வேலி.

(20869)

## கிணறு புனரமைப்பு

சாவகச்சேரி,ஜூலை31

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் மட்டுவில் கமலாசனி வித்தியாலய குடிதண்ணீர்க் கிணறு 60 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக அதிபர் செ. பேரின்பநாதன் தெரிவித்துள்ளார். (ம-10-30)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை31

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி வாரத்தையொட்டி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 'உள்ளூர் ஆளுகை மலர்-2003' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலினை வடக்கு -கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். ரங்கராஜன் உள்ளூராட்சி வாரத்தின் இறுதி நாளான கடந்த 21ஆம் திகதி வெளியிட்டு வைத்தார்.

இந்த நூலில் உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான சுமார் 29 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10-185)

---

மானிப்பாய் றோட்டரக்ட் கழகத்தினால் நடத்தப்பட்ட

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 2565 இரண்டாம் பரிசு - 7871

மூன்றாம் பரிசு - 3577

ஆறுதல் பரிசில்கள்:

| | |
|---|---|
| 01) 2788 | 06) 5219 |
| 02) 4679 | 07) 3218 |
| 03) 1729 | 08) 7850 |
| 04) 5472 | 09) 1284 |
| 05) 4442 | 10) 0040 |

பரிசில்களைப்பெற கீழ்வரும் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்

021 - 222 - 3129

(C/29205) (25-21-15-18)

---

## பதினேழாம் நாள் நினைவஞ்சலி



கலையுலகில் புகழ்படைத்தவரும்,
எமது குடும்பத்தவர்களுடன் மிக அன்புடையவருமான
நாதஸ்வர கலாநிதி, கலாசூரி

### அமரர் N.K. பத்மநாதன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இணுவில் முருகப் பெருமானையும், நல்லூர்க் கந்தப்பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

சா. சோதிப்பெருமாள J.P.
(இளைப்பாறிய அதிபர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில்.
(20868) (26)

---

## 16ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 04 - 1935



மறைவு 15 - 07 - 2003

### திருமதி கணபதிப்பிள்ளை மரகதேஸ்வரி

வாஞ்சை நிறைந்தவளே!
வதையுண்டு போன தாயே!
வாடித் தவிக்கின்றோம்
விழியிரண்டும் நீர் சொரிந்து!

தந்தையை இழந்த போதும்
தளர்வெதனையும் காட்டிடாது
தரணியிலே நாம் உயர
மெழுகுவர்த்தியானீர்கள்...!

ஆயிரம் உறவுகளிருந்தும்
ஆசையுடன் 'அம்மா' என்றழைக்க
அகிலத்தில் யார் வருவார்
மாண்டு தான் போனீர் ஏனோ?

நிரந்தர முகவரி:
சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
பருத்தித்துறை வீதி,
இருபாலை,
கோப்பாய் தெற்கு.

பிரிவால் துயருறும்;
க.உபேந்திரன் (மகன்),
க.பிரபாகரன் (மகன்).

(20895) (21-15-18)

---

# கொழும்புத்துறையில் சேதமடைந்த வீடுகளுக்கு கட்டடப் பொருள்கள்

## இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை

அரியாலை,ஜூலை31

கொழும்புத்துறைப் பகுதியில் கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சினால் கட்டடப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை, அவற்றுக்குத் தேவையான கட்டடப்பொருள்களின் அளவுகள் போன்ற விவரங்களைச் சேகரித்துத் தருமாறு அப்பகுதி ஆலயங்களின் பரிபாலனசபை மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றை அமைச்சு கோரியுள்ளது. இதனையடுத்து மேற்படி விவரங்களைச் சேகரிக்கும் பணியில் அப்பகுதிப் பொது அமைப்புக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

கடந்தகால யுத்தத்தின் காரணமாகக் கொழும்புத்துறைப் பகுதியில் அதிக அளவிலான வீடுகள் மற்றும் ஆலயங்கள் என்பன பெரும் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-10-17)

## காணி அன்பளிப்பு

சாவகச்சேரி,ஜூலை31

கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்துக்கு இரண்டு பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியான கு.சோமசுந்தரம் என்பவரே இக்காணியை வழங்கியுள்ளார். (ம-10-31)

---

## கூறுவிலை கோரல்

*வேலைத்திட்டம்:*
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின சராசரி 17'x180'அளவு கொண்ட வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல்.

*வேலை வழங்குபவர்:*
கனடா பழைய மாணவர் சங்கம் சார்பில் கொழும்பு பழைய மாணவர் சங்கம்.

*மதியுரைஞரும் வேலை மேற்பார்வையாளரும்:*
உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம்.

*வேலையின் பெரும் பகுதி:*
கூரை போடுதலும் கதவு, யன்னல்கள போடுதலும்.

*மீளளிக்கப்படாத பணம்:* ரூபா 250.00

*விவரங்கள் பெறவேண்டிய இடமும் காலமும்:*
உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம் 02.08.2003ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை.

*கூறுவிலை திறத்தல்:* 16.08.2003 ஆம் திகதி சனிக்கிழமை காலை10 மணிக்கு.

*கூறுவிலை சமர்ப்பிக்க வேண்டிய இடம்:*
பிரதான நிர்வாக அதிகாரி,
உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரையகம்
06, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(20886) (21-15-18-2.

---

## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கப் பணியாளர்.
திரு.க.கமலேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகசபை செங்கமலம்

அவர்கள் 26.07.2003 சனிக்கிழமை அன்று காலமாகியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.'

கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்க
பணியாளர் நலன்புரிச்சங்கம்.

(20891) (21-25-15-18)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தெய்வேந்திரம் கௌசலாதேவி

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் பண்டகை, உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வேந்திரம் கௌசலாதேவி அவர்கள் 29.07.2003 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு காலமானார்.

அன்னார் கந்தசாமி - நல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் ரகுநாதன் (ஜேர்மனி), ரஜீதரன் (கொழும்பு), கீதாஞ்சலி (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம்), சாந்தினி, மைதிலி (வித்தியா ஜெயந்தினி - யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி உயர்தர வகுப்பு), ஜதீஸ், நரேன், துவாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவாஞ்சலி, கிருபானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.07.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'மங்களகரி'*
*பண்டகை ஒழுங்கை, உடுப்பிட்டி*

தகவல்:
கணவர் தெய்வேந்திரமும்,
பிள்ளைகளும். (20882)

(21-25-15-18)

## சங்கரப்பிள்ளை செல்வநாயகம்

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல முறிவு வைத்தியா சங்கரப்பிள்ளை செல்வநாயகம் 29.07.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும் செந்தில்நாதன்(முன்னாள் அரச கட்டட ஒப்பந்தகாரர், அனுராதபுரம்), காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், சிவசுப்பிரமணியம், சாமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரா, சாந்தினி, சின்னதங்கரமணி, காலஞ்சென்ற சிவகுமாரி, சாந்தா, சங்கரப்பிள்ளை (குவைத்), சாருமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வினாசித்தம்பி (அரசகட்டட ஒப்பந்தகாரர்), பாலச்சந்திரன், அம்பிகாபதி (களஞ்சியப் பொறுப்பாளர் ப.நோ.கூ.ச., பருத்தித்துறை), ரணசிங்க (வவுனியா கால்நடைத் திணைக்களம்), ருளப்யேந்திரமணி (ஆசிரியர், இறக்குவானை), கந்தவேள் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நந்தகோபன், கீதாஞ்சலி, துவாரகோபன், தர்சினி, கோபிதாஸ், தேவதாஸ், சுதர்சினி, ராஜினி, தர்மபாலினி, ஜெயப்பிரசாத், சஜிந்தா, பவதாரணி, பைரவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2003) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*களையாவோடை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*


(C/29204) (21-15-18-25)

தகவல்:
க.வினாசித்தம்பி
(மருமகன்)

---

உ

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்



## ஆடிப்பூரத் திருவிழா (பூரகர்மா)

### 01.08.2003 வெள்ளிக்கிழமை

*அம்பிகை அடியார்களே!*

ஆடிப்பூர நன்னாளில் பகல் மூலமூர்த்தி அம்பிகைக்கு 108 சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும், நவோத்தர சகஸ்ர மஹாசங்காபிஷேகமும் (1008 சங்குகள்) ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறும்.

தொடர்ந்து ருதுசாந்தி வைபவம் நடைபெற்று அம்பிகை திருவூஞ்சலாடி "தாமரைப்பூ"வில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்காட்சி நல்குவார்.

☞ ஆலய கல்யாண மண்டபத்திலும் மற்றும் "அமுதசுரபி" அன்னதான மடத்திலும் மாகேஸ்வர பூசை இடம்பெறும்.

மேற்படி ஆலய சிவாச்சாரியர்கள் ஆடிப்பூர உற்சவத்தை சிறப்புற நடத்தி வைப்பார்கள்.

*மங்கள இசை:* நயினை இ. சுந்தரராஜன் குழுவினர்

*விசேட மங்கள இசை:* நாதஸ்வர கான இரத்தினம் இணுவில் K.R. சுந்தரமூர்த்தி குழுவினர்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்,
நயினாதீவு.

- ஆடிப்பூர விழா உபயகாரர்கள்.

(20849) (26-15-18)